Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை (27-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:121

# நேரடிப் பேச்சை ஆரம்பிக்க குறைந்தது 3 வாரங்களாகும்

## சொல்ஹெய்ம் கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்27

**சமாதான முயற்சிகளின் முதற்கட்டமாக இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம். இரு தரப்பும் நேரடிப் பேச்சுக்கான மேசைக்கு வருவதற்கு குறைந்தது இன்னமும் மூன்று வாரங்களாவது எடுக்கலாம். எனினும் அதற்கு முன்னதாக இரு தரப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதில் ஆர்வமாக உள்ளோம்.**

**- இவ்வாறு கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டு தாபனத்திற்கு வழங்கிய விசேட பேட்டியில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கின்றார்.**

அவர் அந்தப் பேட்டியில் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எங்கு நடைபெறும் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. இருந்த போதிலும் நெதர்லாந்திலும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

சமாதான முயற்சிக்கு இந்தியா முட்டுக்கட்டை போட்டதாக வெளியான தகவல்கள் குறித்து அதிகம் கருத்துக்கூற நான் விரும்பவில்லை. நடுநிலையாளராகக் கடமையாற்றும் போது சில கட்டுப்பாடுகளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. ஆனால் இதுவரை எந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் வான் தாக்குதல்

வவுனியா,மார்ச்27

பூநகரி - கல்முனைப் பிரதேசத்தில் நேற்றும் காலையில் வான் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை.

அதேவேளை -

வன்னியில் தொடரும் வான் தாக்குதல்களைக் கண்டித்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பரவலாக கண்டன ஊர்வலங்கள் நேற்று இடம்பெற்றன. (உ-3)

## பிரான்ஸ் ஜனாதிபதியுடன் நாளை இலங்கை ஜனாதிபதி முக்கிய பேச்சு

கொழும்பு,மார்ச்27

பிரான்ஸ"க்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு நாளை பிரான்ஸ் ஜனாதிபதி ஷிராக்குடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார்.

இச்சந்திப்பின் போது -

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்து சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஷிராக், ஜனாதிபதி சந்திரிகாவைக் கோருவார் என்று சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அண்மையில் ஜனாதிபதி பிரான்ஸ"க்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய விஜயத்தின் போது தமது சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரான்ஸ் தலைவர்களுக்கு ஜனாதிபதி குமாரதுங்க விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமாதானத்தை எட்டுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படும் என்று பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரெஞ்சுப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட அந்நாட்டின் பல அமைச்சர்களுடன் இலங்கை ஜனாதிபதியுடன் செல்லும் குழு பேசசுக்களை நடத்தும். (உ-3)

## கோப்பாய் இராஜ வீதியில் கிரனேட் வெடிப்பில் உயிரிழந்த இளைஞன்!

### சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்27

கோப்பாய் இராஜ வீதிக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

பச்சை நிற சேர்ட்டும் நீல நிறக் காற்சட்டையும் அணிந்திருந்த - சுமார் 25வயது மதிக்கத்தக்க - கட்டுமஸ்தான தோற்றத்தைக் கொண்ட - இந்த இளைஞனின் வயிற்றுப் பகுதி குண்டுவெடிப்பினால் சேதமடைந்துள்ளதுடன் வலதுகை சிதறிய நிலையில் காணப்படுகிறது.

சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலீஸாரினால் யாழ்.நீதி மன்றுக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பான மரண விசாரணையை நடத்துமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவுக்கு உத்தரவிட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - கிளிநொச்சி இடையே செஞ்.உதவியுடன் பஸ் சேவை நடத்துக!

### மகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,மார்ச்27

"இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவுக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சிக்கும் இடையில் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு வசதியாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் பஸ் சேவை ஒன்றை நடத்துக!"

- இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி அமைச்சர் சுமதிபாலவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி கிடைக்குமானால் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தன்னிடம் உறுதியளித்தார் என்றும் மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

தமது கோரிக்கையின் பேரில் - வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் 14 புதிய பஸ்களை உடன் அனுப்பி வைக்கவும் -

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் இடர்காலக் கொடுப்பனவை உடன் வழங்கவும் -

அமைச்சர் தம்மிடம் உறுதியளித்ததாகவும் தி.மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (உ)

## புத்தளம் எல்லைப் பகுதியில் உள்ள மன்னார் மாவட்டக் காடுகளில் புதிய படை நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,மார்ச்27

மன்னார் மாவட்டத்தின் தெற்கு பிரதேசத்தில் - புத்தளம் எல்லைப் பகுதியில் உள்ள காடுகளில் படையினர் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்பு கோபுரங்கள், கடற்படைத் தளங்கள் போன்றவை உள்ளதாக கிடைத்த தகவல்களை அடுத்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்-

காடுகளுக்குள் புலிகளை உள்தள்ளும் நடவடிக்கை இது என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் சிக்கித் தமது கணவன் காணாமற்போயுள்ளார் என்று நீலமடு என்னும் காட்டுப்பகுதி கிராமத்தைச் சேர்ந்த பிலிப்பு கலிஸ்ரஸ் (வயது40) என்ற பெண் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகருக்கு நேற்று வந்து சேர்ந்த அந்தப் பெண், காணாமற்போயுள்ள தனது கணவனான பிலிப் குறூஸ் என்பவரைக் கண்டுபிடிக்க உதவுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது கணவனுடன் வேட்டைக்குச் சென்ற மற்றும் இருவர் பற்றியும் தகவல் இல்லை என்று அந்தப் பெண் தெரிவித்துள்ளார். (உ-3)

## யாழ்ப்பாண மக்களின் பயண அனுமதி நெருக்கடி பற்றி தொல்லை தவிர்ப்புக்குழு ஆராய்வு

கொழும்பு,மார்ச்27

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதியைப் பெறுவதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் குறித்து தொல்லை தவிர்ப்புக்குழு நேற்று ஆராய்ந்துள்ளது.

நீதி அமைச்சரும், தொல்லை தவிர்ப்புக்குழுத் தலைவருமான பட்டி வீரக்கோன் தலைமையில் கூடிய இந்தக் குழு, இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்தது.

பயண அனுமதி பெறும் முறையை நீக்குவதா அல்லது மறுபரிசீலனை செய்வதா என்பது குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

கொழும்பு வரும் தமிழ் மக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தங்க அனுமதிக்கும் நடைமுறையை மாற்றுவது தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்பட்டது. (உ-3)

## மன்னாரில் குடும்பஸ்தர் மரணம்: முகாம் பொறுப்பதிகாரி உட்பட இரு கடற்படையினர் காவலில்!

வவுனியா,மார்ச்27

கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட வேளை உயிரிழந்த கந்தையா உதயகுமார் என்ற குடும்பஸ்தரின் மரணம் தொடர்பாக கடற்படையினரின் முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி உட்பட இரு கடற்படையினரை விளக்கமறியலில வைக்கும்படி மன்னார் மாவட்ட நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

மன்னார் நூறு வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த - ஏழு பிள்ளைகளின் தந்தையான - கந்தையா உதயகுமார் விசாரணைக்கென கடந்த மாதம் 28ஆம் திகதி கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

மறுநாள் காலை அவரது சடலத்தைப் பொலீஸார் மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தனர்.

இவரது கழுத்து நெரிக்கப்பட்டு மூச்சுக்குழாய் முறிக்கப்பட்டதால்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 6ஆம் மாத நினைவஞ்சலி

இகம் 16 - 09 - 1930

பரம் 27 - 09 - 2000



## சிவக்கொழுந்து இராசரத்தினம்

எம் குல தெய்வமே!
எங்கள் அப்பா!
ஆறு மாதங்கள்
ஆறு நிமிஷம் போல்
கழிந்து விட்டன...
நீங்கள் எங்களோடு
இல்லை என்ற உண்மை
இன்னமும் முழுதாய்
ஜீரணமாகாத மனங்களோடு
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலத்து
பிரியம் நிறைந்த நினைவுகளோடும்
நனைந்த விழிகளோடும்
உங்களை அஞ்சலிக்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், மாமனார், உறவினர்கள்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர். (85928)

---

வலிகாமம் வடக்கு

## பிரதேச மலர்வெளியீட்டு விழா

**28.03.2001**

**வலிகாமம் வடக்கு பிரதேச மலர் வெளியீட்டு விழா நாளை (28.03.2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.**

**நிகழ்ச்சி நிரல்**

*மங்கள விளக்கேற்றல்*
*மௌன அஞ்சலி*
*தமிழ்த்தாய் வாழ்த்து:* திரு. எஸ். திலகநாயகம் போல் அவர்கள்
*வரவேற்புரை:* செல்வி க. சிவகௌரி அவர்கள்
*அறிமுக உரை:* சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்
*ஆசியுரை:* கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்
*வாழ்த்துரை:* திரு. க. சண்முகநாதன் அவர்கள்
*(அரச அதிபர், யாழ்ப்பாணம்)*
*வெளியீட்டுரை:* பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
*(உயர்பட்டப் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)*
*முதற்பிரதி பெறுநரும் வாழ்த்துநரும்:*
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
*(தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை)*
*சிறப்புப் பிரதி பெறுநர்கள்:*
*மதிப்புரை:* 1. கலாநிதி சபா ஜெயராசா அவர்கள்
*(முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல்துறை தலைவர், இராமநாதன் நுண்கலை, நடனத்துறை)*
2. திரு. வி. பி. சிவநாதன் அவர்கள்
*(தலைவர், முதுநிலை விரிவுரையாளர், பொருளியற்றுறை)*
*பதிலுரை:* திருமதி ப. திலகநாயகம் அவர்கள்
*நன்றியுரை:* திரு. க. கணேசதாஸ் அவர்கள்
*(கிராம உத்தியோகத்தர்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*பிரதேச செயலகம்,*
*வலி.வடக்கு.*

**பிரதேச செயலரும்,**
**விழாக்குழுவினரும்,**
**செயலக உட்கள, வெளிக்கள**
**உத்தியோகத்தர்களும்.**

*அன்பளிப்பு:-*

**N.தவராசா,**

**பதிவு செய்யப்பட்ட பிரபல வீதி, கட்டட ஒப்பந்தகாரர்**
*உடுவில், சுன்னாகம்.*

(85916)

---

**THIGAL**

இணுவில்

*A/L 2003 கலை, வர்த்தகம்*

*கணக்கீடு* - S.தவா
*பொருளியல* - E.ஞானேஸ்
*வணிகக்கல்வி* - திரு.யசோ
*தமிழ்* - K.தர்மராஜா
*அளவையியல்* - S.ஜெயந்தன்
*இந்து நாகரிகம்* / *இந்து சமயம்* - K.சத்தியதாஸன்
*நாடகமும் அரங்கியலும்* - திரு.மதி
*பொதுவினா* - T.திருமுருகன்
*பொது ஆங்கிலம்* - V.சிவநாதன்

ஆரம்பம்:
28.03.2001 3 p.m.

(C/15924)

---

**வெளிவந்துவிட்டது**

முதலாந்தவணைப் பரீட்சை 2001 மார்ச்
**தரம் 8,9,10, O/L**
சகல பாடங்களுக்குமான
மாதிரி வினாத்தாள்கள்
**வெளியீடு: IPE**
*கிடைக்குமிடம்:*
*யாழ். பிரபல புத்தகசாலைகள்.*

(85909)

---

**THIGAL**

இணுவில்

**கணிதப்பிரிவு**

*பௌதிகவியல்* - K.நமேஸ்
*இரசாயனவியல்* - K.பவான்
*இணைந்தகணிதம்* - G. ஐங்கரனீ
- M.ராஜன்

ஆரம்பம்
நாளை 28.03.2001 4 p.m.
O/L DAY CLASS - பிரிவு-I
ஆரம்பம்: 28.03.2001 8 a.m.

(C/15925)

---

**நாவலர்**

ஆனைப்பந்தி
**A/L 2002**
**Organic Chemistry**
இன்று 27.03.2001 ஆரம்பம்
Tue., Wed.- 4-5.00 p.m.
**General Chemistry**
ஆரம்பம்: 30.03.2001
Fri.- 3-5.00 p.m.
**BY: திரு.அன்பு**

---

**ராஜா** யாழ்ப்பாணம்

11 அக்கடமி விருது பெற்ற
சிறந்த படம்

**டைட்டானிக்**

தமிழில்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
நாளை முதல்
**வானத்தைப் போல**

(C/15473)

---

**நாகம்ஸ்**

சுன்னாகம்

**அஜித்,**
**கார்த்திக், மீனா**
நடித்த
**ஆனந்தப் பூங்காற்றே**
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)

(85919)

---

**லஷ்சுமி** இணுவில்

**விஜயகாந்த் (3வேடங்களில்)**
**மந்த்ரா, செந்தில்**
நடிப்பில்
**சிம்மாசனம்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

---

மணிக்குரல் விளம்பர சேவையின்

**★ பாட்டுக்குப் பாட்டு ★ தேன் இசை மழை**

மணிக் குரலின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 15.04.2001 ஞாயிறு அன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இவ்விழா கலை நிகழ்ச்சிகளில் ★ பாட்டுக்குப்பாட்டு ★ தேன்இசை மழை ஆகியவற்றில் பங்கு பற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் எதிர்வரும் 05.04.2001 ஆம்திகதிக்கு முன்பாகத் தங்கள் விண்ணப்பங்களை வழமைபோல் தெளிவாக எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

**V.S.சற்குணன் (மணி வீடியோ)**
52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம்.

*விளம்பர அன்பளிப்பு:*

*நியூ விதுஷா நகைமாடம்*

(C/15922) 191 HK, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

**மாபெரும் மலிவு விற்பனை**

**லைடன் புடைவை நிலையம்**

தமிழ், சிங்கள புதுவருடம்
மற்றும்
ஈஸ்டர் பண்டிகைகளை முன்னிட்டு
இன்று 27.03.2001 முதல் 14.04.2001 வரையும் சகல துணி வகைகளுக்கும் விசேட கழிவுகள் வழங்கப்படும் என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

**லைடன் புடைவை நிலையம்**
(பஸ் நிலையம் முன்பாக)
**410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பேசி இல. 2381**

(C/15929)

---

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா பொன்னுத்துரை

**(சிங்கப்பூர்)**

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பொன்னுத்துரை கடந்த 24.03.2001 சனிக்கிழமை சிங்கப் பூரில் காலமாகிவிட்டார்.

அன்னார் சண்டிலிப்பாய் செல்லப்பா - அன்னமுத்து தம்பதிகளின் மகனும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், வத்சலா, வசந்தா, இரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினகுமார், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சின்னத்துரை, சுப்பிரமணியம், ஆறுமுகம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று சிங்கப்பூரில் நடைபெற்றன

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*"அன்ன வாசா",*
*சண்டிலிப்பாய்.* (85924)

தகவல்:
செ.நித்தியானந்தம்.
(சகலன்)

## அப்புத்துரை சண்முகநாதன்

(இளைப்பாறிய ஆசிரியர், ஹோலி றோசறி த.க. பாடசாலை)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை சண்முகநாதன் நேற்று (26.03.2001) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவானந்தபவானியின் அன்புக் கணவரும், கிருஷ்ணகுமாரியின் (N.C.A.T. 2ஆம் வருட மாணவி, தொழில்நுட்பக் கல்லூரி) பாசமிகு தந்தையும் ஆயிலியம், அமுதலிங்கம் (ஜேர்மனி), சிவகாமசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகதாஸ், மகாலட்சுமி, விவேகானந்தன், சதானந்தபவானி (சுவிஸ்), கிருபானந்தசிவம் (கனடா), உருத்திரானந்தசிவம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் றஞ்சனா (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் மதுரகன், நிரோஜன், சிந்துஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் கஜீபன், கீர்த்திபன், விலோச்சனா, சர்மிலா, சிவானி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.03.2001) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சிவதரிசனம்",*
*கே.கே.எஸ்.வீதி,*
*இணுவில்.* (85921)

தகவல்:
ச.சிவானந்தபவானி (மனைவி)
ஞான. திருக்கேதீஸ்வரன்
(சகோதரன்)
(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)

## திருமதி
## யோகராணி திருஞானசம்பந்தமூர்த்தி

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யோகராணி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் கடந்த 25.03.2001 ஞாயிறன்று சிவபதமடைந்தார்.

அன்னார் திருஞானசம்பந்தமூர்த்தியின் பாசமிகு துணைவியும் காலஞ்சென்ற சுதந்தரியின்(சுகந்தா) அன்புக்குரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26-03-2001) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*314, கோயில் வீதி,*
*நல்லூர்.* (85923)

தகவல்:
சோ.திருஞானசம்பந்தமூர்த்தி.
(கணவர்)

# உதயன்

## சமாதான ஆண்டு

இந்த ஆண்டை — இரண்டாயிரத்தோராம் வருடத்தை — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி உள்ளார்.

கடந்த வருட இறுதியிலேயே — டிசெம்பர் 24 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கமே — விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்து விட்டார்கள். நாட்டில் சமாதானம் உண்டாக வேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கு அதிக அக்கறை இருந்திருப்பின் இந்த ஆண்டு ஜனவரியிலேயே சமாதான ஆண்டைப் பிரகடனப்படுத்தி இருக்கலாம் அப்போது முதலே சமாதானத்துக்கான தேடலில் அரசு அதிகளவில் ஈடுபட்டிருக்கலாம்.

விடுதலைப் புலிகளை நம்ப முடியாது; முன்னர் ஒரு தடவை எம்மை ஏமாற்றியவர்கள்; நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்போம்; பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அரசாங்கம் போர் நிறுத்தம் செய்யும் என்று — ஜனாதிபதி கூறிவந்தார்.

இப்போது பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னரே சமாதான ஆண்டைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி. சமாதான ஆண்டெனில் போர் மேகங்கள் கலைய வேண்டும். சமாதானத்துக்கான தேடுதல் மிகத் தீவிரமாக நடைபெற வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி அறிவித்துள்ள சமாதான ஆண்டின் அர்த்தம் அதுவல்ல என்றே கொள்ள வேண்டியுள்ளது.

ஏனெனில் —

எமது அரசு போரை எப்போதும் விரும்பியதில்லை. மாறாக ஜனநாயக வழியிலான, மனிதாபிமானப் பண்பை மட்டுமே விரும்புகிறது. எப்படியாவது இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவது என்பதில் எமது அரசு மிகவும் உறுதியாக உள்ளது. போரின் மூலம் ஒரு போதும் சமாதானத்தை உண்டு பண்ண முடியாது — என்று கூறிய அதே வாயால் —

போரை நடத்துவதை விட சமாதானத்தை எட்டுவது கஷ்டமான காரியம் என்றும் —

விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பயங்கரவாதத்தையும் அவர்கள் இன்னும் கைவிடவில்லை இனியும் அவர்கள் இவற்றைக் கைவிடாவிட்டால் அரசு போரை ஓயாது நடத்தும்; தீவிரப்படுத்தும் என்றும்—ஜனாதிபதி சொல்லியுள்ளார்.

சமாதான ஆண்டைப் பிரகடனப்படுத்துவதும் போரைத் தொடரப் போவதாகச் சொல்வதும் முன்னையதை பின்னையது செல்லுபடியற்றதாக்குவதற்கு — தள்ளுபடி செய்வதற்கு — ஒப்பானதாகும்.

சமாதான ஆண்டில் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் அரசு —

சமாதான விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்பைக் கோரும் அரசாங்கம் —

போரைத் தீவிரப்படுத்தப் போவதாகவும், ஓயாது நடத்தப் போவதாகவும் எச்சரிப்பது —

சமாதான ஆண்டுப் பிரகடனத்தால் அதன் போரை நாடும் அணுகு முறை இன்னும் மாறவில்லை — மாறப் போவதில்லை என்று கட்டியம் கூறுவதாகவே தொனிக்கிறது — தோன்றுகிறது.

''வீர லங்கா மாதா'' நிகழ்வில் உரையாற்றியதால் ஜனாதிபதி இவ்வாறு வீராவேசத்துடனும்—கோபாவேசத்துடனும்—நல்லதைக் கெட்டது தள்ளுபடி செய்யும் தொனியில் பேசினரா என்பது அவருக்கு மட்டுந்தான் வெளிச்சம்!

## எரிகாயங்களுடன் தந்தை, மகன் ஆஸ்பத்திரியில்

அரியாலை, மார்ச் 27

மண் எண்ணெய் என்று நினைத்துத் தவறுதலாகப் பெற்றோலை லாம்புக்குள் விட்டு எரித்த சமயம் அது தீப்பற்றி எரிந்து தந்தையும் மகனும் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நீர்வேலி தெற்கு பூதர்மடம் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம் பெற்றது.

த. சண்முகநாதன் (வயது 50) அவரது மகனான ச. மணிமாறன் (வயது 7) ஆகியோரே எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(ம—17)

# காலை நேர மின்வெட்டு யாழ். நகர் பகுதியில் ரத்து!

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ் நகரப் பகுதியில் காலை வேளையில் நடைமுறையில் இருந்து வந்த மின்வெட்டு நாளை தொடக்கம் ரத்துச் செய்யப்படுவதாக இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துரட்னானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

திருநெல்வேலி (பரமேஸ்வரா) மின் பரிவர்த்தனை நிலையத்தில் பழுதுபட்டிருந்த இரு மின்மாற்றிகளும் மாற்றப்பட்டு கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து யாழ் நகரப் பகுதியில் மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டு மூன்று நாளைக்கு ஒரு தடவை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

பரமேஸ்வரா பரிவர்த்தனை நிலையத்தில் இதுவரைச் செயற்பட்டு வந்த இரு மின்மாற்றிகளும் திருத்தம் செய்யப்பட்டு தற்பொழுது கோம்பையன் மணல் பரிவர்த்தனை நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் மட்டுமே மின்வெட்டு நேரம் தற்பொழுது குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் மின்வெட்டினைக் குறைப்பதற்கு தற்போது உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் ஆனால் அதற்கு உடனடியாக வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை—என்றார் அவர்.

(உ-5)

## புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு:

# அரசு வாய்ப்பை நழுவ விட்டால் மோசமான விளைவுகள் ஏற்படும்

## வல்வை நகரசபைத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

விடுதலைப்புலிகள் மூன்றாவது தடவையாக யுத்த நிறுத்தத்தை நீடித்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் கை நழுவ விடுமானால் மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்புத் தொடர்பாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மூன்றாவது தடவையாக ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை நீடித்துள்ளனர். எனினும் இந்த அறிவிப்பு 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல' உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கு முன்னர் பகை நடவடிக்கைகள் நிறுத்தல், ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம், இருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் போன்றவை இடம்பெறுவதை உலக வரலாறு காட்டி நிற்கிறது.

இலங்கை அரசாங்கம் பகை நடவடிக்கை நிறுத்தம் என்ற நிலைப்பாட்டுக்குப் பதிலாக கொடூரமான, குடிமக்கள் மீதான விமானத்தாக்குதல், கடலில் மீன் பிடிக்க கடுமையான கட்டுப்பாடுகள் என்ற புதிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசு தன்னுடைய இன அழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி சமாதானப் பேச்சுக்கு முன் வர வேண்டும்.

இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தையும் அரசாங்கம் கைநழுவ விடுமானால் மோசமான விளைவுகளை தென்னிலங்கை உட்பட அனைத்துப்பகுதி மக்களும், அரசாங்கமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் சமாதானம் என்பது எட்டாக் கனியாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் எனவும் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன்

சமாதானம் ஏற்படமுடியாமைக்கான மிகப்பெரும் பொறுப்பை இலங்கை அரசே ஏற்க வேண்டியிருக்கும் என்பதையும், புலிகளை ஒழித்துக் கட்டி விட்டு அல்லது ஓரம் கட்டி விட்டு அரைகுறைத்தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிக்கலாம் என்ற அரசாங்கத்தின் எண்ணம் வெறும் பகற்கனவாகவே முடியும் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

சங்கானை, மார்ச் 27

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பி.ப 2 15 மணிக்கு அதிபர் க. இரத்தினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோசநாதன் பிரதமவிருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சுந்தரசிவம், சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(க—29)

## சாவகச்சேரி இந்துமாணவருக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 2003 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி தற்காலிகமாகச் செயற்பட்டுவரும் இணுவில் மத்திய கல்லூரியில் அல்லது நெல்லிபடி மகாவித்தியாலயத்தில் இயங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அலுவலகங்களில் விண்ணப்பங்களைச் சேர்ப்பிக்குமாறு அதிபர் ஆர். கைலைநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்

மேற்படி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளும்படியும் ஏற்கனவே சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்று வரும் மாணவர்களும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-10)

> **உதயவாக்கு**
> காரியத்தில் உறுதியாயிருத்தலே வெற்றியின் இரகசியம்.

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 27

முறைசாராப் பயிற்சி நெறிகளுக்குரிய போதனாசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை காலை 9 மணிக்கு யாழ் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளின் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் கடிதம் கிடைக்கப்பெறாதவர்களையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-9)

## நாளை

பங்குனி 15
புதன்கிழமை
திதி: திருதியை
முற்பகல் 8.16 வரை.
செல்லப்பா சுவாமி
குருபூசை
நட்சத்திரம்: பரணி
முன் இரவு 8.49 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 04.44—06.14
இராகுகாலம்: 12 14 — 1.44
(பழைய நேரப்படி.)

# பாவத் தளைகளை அறுத்து இறைவனின் அன்புக்குரியவராவோம்

''இதோ பாரும் நீர் நலமடைந்துள்ளீர். இதைவிடக் கேடானது உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்''

அன்புச் சகோதரர்களே! இறைவனின் இரக்கம் அளவற்றது. நாம் பல தடவைகள் பாவம் செய்த போதும் இயேசு நம்மை மன்னிக்கிறார். 'பார்வையற்றோர், ஊனமுற்றோர், திமிர்வாதக்காரர் என நோயாளிகளைக் குணமாக்கினார். பாவத்தினால் கட்டுண்டவர்களின் தளைகளை அகற்றினார்.

### 28 ஆம் நாள்

### தவக்காலச் சிந்தனை

ஆமாம் இறைவன் எம்மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாகஎம் துன்பங்களைத் துடைக்கின்றார்; பாவங்களை மன்னிக்கின்றார். ஆனால் நாம் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் புறக்கணித்தவர்களாய் எம்விருப்பம்போல் எம் வாழ்க்கையில் குறுக்கு வழிகளில் பொருளீட்டவும் சந்தோஷம் ஈட்டவும் முயற்சி செய்கிறோம். மற்றவர்களை மனதால் துன்புறுத்தி, தொழில் ரீதியாக, நட்பு ரீதியாக பகைமைகளை உண்டாக்கி எமக்குத்தான் எல்லாம் தேவை என மற்றவர்களைத் தாழ்த்தி துன்புறுத்தி நாம் சந்தோஷம் அடைய முயற்சிக்கின்றோம்.

இயேசு கூறுவதைப்போல்

இதைவிடக் கேடானது நிகழாதவாறு பாவம் செய்யாதீர்கள். இறைவனின் இரக்கத்தை நாம் அலட்சியம் செய்யாது, அவர் தரும் மனமாற்றத்தின் காலத்தைப் பயன்படுத்தி பாவத்தளைகளை அறுத்து மனம் குணமடைந்தவர்களாய் இறைவனின் அன்புக்குரியவர்களாவோம்.

\- பூலிங்கம் ஜெயவதனி.


**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

## அருள் சொரியும் வைத்தீஸ்வரனே!

பல்லவி
வண்ணையில் அருள் சொரியும் வைத்தீஸ்வரனே
பண்ணொன்றப் பாடினோம் அருள்புரி ஐயனே
அனுபல்லவி
கண்ணன்று சுந்தரர்க்குக் கொடுத்தனையே அப்பனே
மண்ணினில் வாழ்வு இன்றே தந்திடு சிவனே
(வண்ணையில்)
சரணம்
அன்பு மலர் கொண்டே நல்லாரம் புனைந்தோமே
என்பெலா முருகிடவே திருமுறை ஓதினோமே
அம்பலமே நல்கி அருளினை ஈகுவாயே
இன்னுமேன் தயக்கமோ தையல் நாயகி நாதனே
(வண்ணையில்)

அருளிசையரசு
கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன்
(இன்று 9 ஆம் திருவிழா)

# வன்னியில் 7,000 சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில்லை

## வறுமை நிலையே முக்கிய காரணம்

கொழும்பு, மார்ச் 27

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் 7 ஆயிரத்து 478 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலும் பாடசாலையில் இருந்து விலகியும் உள்ளனர் என இப்பகுதி கல்விப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதாரத் தடை மற்றும் இராணுவ ஷெல், விமானத் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகளால் நிலவும் வறுமை நிலையே இதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறை சவர்ச்சியற்ற கற்பித்தல் முறை, வகுப்புக் கட்டடம் தளபாட வசதியின்மை, கற்றலுக்கான சூழல் இன்மை என்பனவற்றால் தம்மைப் பதிவு செய்து பாடசாலைக்கு முதலில் சமுகம் கொடுத்து விட்டு பின்னர் பாடசாலைப்பக்கமே செல்லாதவர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

கிளிநொச்சி கல்வி வலயம் -834 மாணவர்கள், வவுனியா வடக்கு கல்வி வலயம் -156 மாணவர்கள், மடுவில் -462 மாணவர்கள், முல்லைத்தீவில் -287 மாணவர்கள் பதிவு செய்து வகுப்புகளுக்கு வராதவர்கள்.

பாடசாலைக்கு வராத மாணவர்கள் விவரம்:

முல்லைத்தீவில் 3485 பேர், மடுவில் 542 பேர், துணுக்காயில் 2175 பேர், கிளிநொச்சியில் 6753 பேர், வவுனியா வடக்கில் 600 பேர்.

பாடசாலைக்கு வந்து இடையில் விலகியவர்கள் விவரம்:

கிளிநொச்சி -2799 பேர், வவுனியா வடக்கு 320 பேர், முல்லைத்தீவு- 1084 பேர், துணுக்காய்- 909 பேர், மடு- 625பேர். [க]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வல்லிபுரம் இராமநாதன்

(கல்வளை, சண்டிலிப்பாய்)

தோற்றம் 23-11-1925 மறைவு 27-03-2000

எங்கள் பாசதீபமே அப்பா!
நினைந்து நினைந்து
நெஞ்சம் உருகுதே!
நீங்காத துன்பம் பெருகுதே
மண்ணும் கடல் வானும்
மறைந்து முடிந்தாலும்
மறக்க முடியாதப்பா
உமது பிரிவை ..........

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வவுனியா. (85886)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1952 — 03 — 04



உதிர்வு 2001 — 02 — 11

### அமரர் வைத்திலிங்கம் துரைசிங்கம்

அன்பின் அப்பா!

எங்கள் கண் கண்ட தெய்வமே! அன்பின் திருவுருவே! நீங்கள் இல்லாத நாள்கள் தாமரை இல்லாத தடாகம் போல் எம் வாழ்வு உள்ளதப்பா! தாயை இழந்த கன்றைப் போல் கதறிக் கதறி அலைந்து அந்தகார இருளில் மூழ்கிக் கிடக்கும் எம்மை அன்புக் கரம் நீட்டி அணைக்க இவ்வுலகில் உங்களையன்றி வேறு யாரும் இல்லை அப்பா!

நாம் உங்களை நேசித்தோம் அப்பா! அதைவிட இறைவன் உங்களை நேசித்துக் கொண்டாரே அப்பா! நாம் ஒரு நாள் ஒன்று சேருமட்டும் உங்கள் நினைவு மாறாதப்பா!

எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், இவரின் இறுதிக்கிரியைகள் வரை எம்முடன் நின்று பல உதவிகள் புரிந்தவர்களுக்கும்மற்றும் கடித மூலமும், தொலைபேசி மூலமும் எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அஞ்சனத்தாழ்வு புனித ஆரோக்கியமாதா ஆலயத்தில் இன்று (27-3-2001) செவ்வாய்க்கிழமை காலை 7. 00 மணிக்கு திவ்விய பூசைப் பலி ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் நிகழ்வுகளில் பங்குபற்ற வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சும்

மனைவி, தாய், பிள்ளைகள்.

5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர். (85519)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 27

தென்மராட்சிப் பிரதேச கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிக்கு கோ பாய் கிறிஸ்துவ கல்லூரியில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதேசத்தில் இயங்கிய கிராமிய அபிவிருத்திச்சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களை ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக நிர்வாக அலுவலர் செ. முருகையா அறிவித்துள்ளார். (ச-117)

## கைதடி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் இருந்து இந்த வருடம் முதற்றடவையாக ஜி சி. ஈ (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் தமது ஒப்படைகள், சணிப்பீடுகள் ஆகியவற்றின் புள்ளிகளையும் செயற்திட்ட அறிக்கையையும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பாக மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சமர்ப்பிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (க-10)

## கள்ளுத் தவறணை முகாமையாளருக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி, மார்ச் 27

தவறணையில் இருவருக்கு இடையேமூண்ட சண்டையை விலக்கி விடச் சென்ற தவறணை கிளை முகாமையாளர் அடிகாயங்களுக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் கொற்றாவத்தை கள்ளுத் தவறணை கிளை முகாமையாளரான அரசரத்தினம் ஜெயரூபன் (வயது 27) என்பவரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார். (ச-117)

## ஆட்டோ விற்பனைக்கு உண்டு

206 - 4094 இலக்கத்தை உடைய ஆட்டோ விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
82/6, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

(85885)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது பாடசாலையின் கட்டட வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக வடக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு வடக்கு —கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சர்

**கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான

**திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களுக்கும்

ஈ. பி. டி. பி. அமைப்பின் குருநகர் பொறுப்பாளர்

**திரு. து. இளங்கோ (றீகன்)**

அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை.
யாழ்ப்பாணம். (85823)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா செல்லத்துரை

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 33, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, செல்லத்துரை (வேல்சாமியார் புங்குடுதீவு, உப தலைவர் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்) 24- 03- 2001 சனிக்கிழமை நல்லூரில் இறைபதமடைந்தார்.

இவர் நாகரெத்தினம் (பூமணி) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மாவின் அன்பு மகனும், ஆறுமுகம் - சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலுசாமியார், குஞ்சிப்பிள்ளை சின்னத்தங்கம், செங்கமலம், ஆச்சிமுத்து, கதிராசிப்பிள்ளை மற்றும் சுந்தரம்பிள்ளை, தங்கக்குட்டி சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பரராசசிங்கம், பராசக்தி, துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வரதலெட்சுமி (சுவிஸ்), அன்னலெட்சுமி, காலஞ்சென்ற சிவகணநாதன், கிருஷாம்பாள் (சுவிஸ்), முருகானந்தன் (சுவிஸ்), சதானந்தன் (கனடா), கிருபானந்தன் (சுவிஸ்), கிருபாமணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியநாதன் (சுவிஸ்), சிவானந்தலிங்கம் (முகாமையாளர், புங்குடுதீவு. நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நயினாதீவு), புனிதவதி, மகேந்திரன் (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்), ஜெயராணி, மோகனராணி, இந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26—03—2001) நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப்பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு சிவானந்தசிங்கம்

33, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (85890)

### திருமதி குலசேகரம் சாந்தகுமாரி (சாந்தா)

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி குலசேகரம் சாந்தகுமாரி (சாந்தா) 25.03.2001 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் குலசேகரத்தின் அன்பு மனைவியும் ரமேஷ்குமார், பிரசாந்தினி, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
இ. குலசேகரம் (குணம்)
(கணவன்)

நிரந்தர முகவரி:
மீனாட்சி அம்மன் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
இராணி மில் ஒழுங்கை,
காளிகோயிலடி,
நெல்லியடி.

(85891)

# மூவாயிரம் குடும்பங்களின் வாழ்விடமாக சிறப்புற்று விளங்கிய பளைப் பிரதேசம்

பளைப் பிரதேசத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து இன்று 27.03.2001 செவ்வாய்க்கிழமையுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.

அந்த நாளின் மறக்கமுடியாத நிகழ்வுகளைப் பளைப் பிரதேசத்து மக்கள் இன்று மீட்டுப் பார்க்கின்றனர்.

2000 மார்ச் 26ஆம் திகதி நள்ளிரவு நேரம் மக்கள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த வேளை திடீரென பிரதேசமே அதிரும் வண்ணம் ஷெல் குண்டுகளும் துப்பாக்கி வேட்டுகளும வெடித்தன. துடித்து எழுந்த மக்கள் நள்ளிரவு வேளையில் எங்கு போவதென்று தெரியாமல் வயிறு கலங்கினர். ஷெல் குண்டுகளின் சத்தம் அண்மித்துக் கேட்கத் தொடங்கியதால் வெளியே ஓடுவதா அல்லது வீட்டினுள் படுத்திருப்பதா என ஒரே குழப்பம்.

ஷெல் குண்டு மற்றும் துப்பாக்கி வேட்டுக்கள் தலைக்கு மேலாகச் சீறிக்கொண்டு செல்லத் தொடங்கவே வீட்டிலிருந்து அடையாள அட்டைகளை மட்டும் எடுத்துக் கொண்டு இரவு உடைகளுடன் கோயில்களை நோக்கி ஓடியவர்கள் ஏராளம் பேர்.

தூரத்தில் மோதல் நடைபெறுவதாக நினைத்து வீட்டினுள் உறங்கிக் கிடந்தவர்கள் சிலர்.

பளைப் பிரதேசத்தில் உள்ள ஆனைவிழுந்தான் முகாம் தாக்குதலுக்கு உள்ளான வேளையில் அயற் கிராமங்களான அரசர்கேணி, கச்சார்வெளி, செல்வபுரம், இத்தாவில், வேம்பொடுகேணி, இந்திரபுரம், முகமாலை, மடத்தடி, அம்பளாவளை, பொந்தர்குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். இது நடந்து இன்றுடன் ஒரு வருடமாகிவிட்டது.

**ஐ.கிருஷ்ணன்**
தென்மராட்சிச் செய்தியாளர்

நள்ளிரவு தொடங்கி மறுநாள் காலை வரை ஷெல் வீச்சுக்களின் அதிர்வுகளைத் தாங்கியபடி இருந்துவிட்டு ஷெல் வீச்சு ஓய்ந்த வேளையில் கையில் அகப்பட்ட உடுப்புக்களை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியேறியவர்கள் தாங்கள் கைவிட்டு வந்த வீடுகளையும் உடைமைகளையும் பிள்ளைகள் போல் வளர்த்துப் பயன்பெற்ற மரங்களையும், ஆடுகள், மாடுகளையும் விட்டு வந்து ஒரு வருடமாகிவிட்டது. அவற்றினை மீண்டும் சென்று பார்த்து வர முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். மார்ச் 28 ஆம் திகதி (28.03.2000) மாலையுடன் கண்டி வீதிப் போக்குவரத்துக்குத் தடைப்பட்டது. அதன் பின் ஏப்ரல் 20 ஆம் திகதி வரை தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவர்கள் எங்கே செல்வது என்பது தெரியாமல் பிரதேசத்தை விட்டு வெளியேற முடியாது புலோப்பளை, கிளாலி தென்னந்தோட்டங்களில் அகதிகளாகத் தங்கி அவர்கள் அனுபவித்த அவலங்கள் ஏராளம்.

### தெங்கு வளம் கொழிக்கும் பூமி

பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் என்றால் குடாநாட்டு மக்களின் மனதில் தெரிவது எங்கு பார்த்தாலும் வரிசையாகக் காணப்படும் தென்னை மரங்களே. பிரதேசத்தின் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளில் காணப்பட்ட தென்னை மரங்களிலிருந்து பெறப்படும் தேங்காய்கள் குடாநாட்டு மக்களின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன. பளைத் தேங்காய், பளைக் கிடுகு, பளைத் தும்பு என்று சொல்லுமளவுக்கு பெருமைபெற்ற தெங்குப் பொருள்களை வாரி வழங்கிய பூமி பளை. அந்த அளவுக்கு பளைப் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் தெங்கு உற்பத்தியில் ஆர்வம் காட்டி பயன்களையும் பெற்று வந்தன.

இந்தத் தென்னை மரங்களை நம்பி ஆயிரக்கணக்கான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர்களின் நாளாந்த வருமானத்திற்கு இந்தத் தெங்கு உற்பத்திகள் பெரிதும் கைகொடுத்தன.

இருவாட்டி மண் அமைப்பைக் கொண்ட பளைப் பிரதேசம் தெங்கு உற்பத்திக்கு மட்டுமல்ல, நெல் மற்றும் உப உணவுப் பயிர்களையும் உற்பத்தி செய்வதற்கு உகந்ததாக இருந்தது. இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய், மரக்கறிவகைகள் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளுக்கு பெருமளவில் விற்பனைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

## அதன் முந்திய நிலைக்குத் திரும்புவது எப்போது?

### பளை நகரின் பெருமை

எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையான எல்லைகளைக் கொண்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் தாயகமாகத் திகழ்ந்தது. இப்பிரதேசத்தின் தலைநகரமாக பளை நகரம் விளங்கியது. நகரின் சுற்றுவட்டத்தில் மத்திய கல்லூரி, ஆஸ்பத்திரி, பிரசவ விடுதி, பிரதேச சபை, கமநல சேவைகள் நிலையம், அஞ்சலகம், கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை அலுவலகங்கள், பெருந்தெருக்கள் உட்பட பல திணைக்கள அலுவலகங்கள் செயலாற்றி வந்தன. இவற்றுடன் பொதுச் சந்தை, வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள் அனைத்தும் நகரில் இயங்கின. கிளாலி தொடக்கம் ஆனையிறவு வரையான கடலை நம்பி ஐந்நூறுக்கும் மேற்பட்ட கடற்றொழில் குடும்பங்களும் வாழ்ந்து வந்தன.

பெருந்தோட்டம், விவசாயம், வியாபாரம், மீன்பிடி, கைத்தொழில், சிறுதொழில், அரசதொழில் ஆகியவற்றை நம்பி வாழ்ந்த அனைத்துக் குடும்பங்களும் குறுகிய அவகாசத்தில் இருப்பிடங்களை விட்டு வெளியேறி சொந்த இடங்களைப் பார்வையிட முடியாமல் மனவேதனைகளைச சுமந்த வண்ணம் அகதி வாழ்க்கை வாழத் தொடங்கி ஒரு வருடம் ஆகிவிட்டது.

சுமார் 80 சதவீதமான பளைப் பகுதி மக்கள் அகதி வாழ்வில் ஆடிப்போயுள்ளதை அவதானிக்க முடிகின்றது. மாணவர்களில் 20 வீதமானவர்கள் வறுமை காரணமாகப் பாடசாலைக்குச் செல்வதையே நிறுத்திக் கொண்டனர்.

நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்களைப் போல் தலை நிமிர்ந்து வாழ்ந்த பல குடும்பங்கள் கொண்டு வந்த உடைமைகள் அனைத்தையும விற்றுவிட்டு தொழில்களுமின்றி சாப்பாட்டுக்குப் பெரிதும் அல்லலுறுகின்றன.

### ஆலயங்களின் நிலை

பிரதேசத்தில் இரட்டைக் கேணி கண்ணகை அம்பாள் ஆலயம், மல்வில் கிருஷ்ணன் கோயில், அல்லிப்பளை அறத்தி அம்பாள் ஆலயம், நவுனவெளி அம்பாள் ஆலயம், இத்தாவில் முருகமூர்த்தி ஆலயம், கிளாலி களிக்கரை நாச்சிமார் ஆலயம் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட இந்து ஆலயங்களும் -

**செய்தி மடல்**

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களான முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலயம், புலோப்பளை புனித யாகப்பர் தேவாலயம், புனித அந்தோனியார் தேவாலயம், புனித இராயப்பர் தேவாலயம் உட்பட பல தேவாலயங்களும கடந்த ஒரு வருட காலமாக பூஜைகளின்றி உள்ளன.

இடப்பெயர்வுகளின் தாக்கங்கள் பற்றிச் சமயப் பெரியார் ஒருவர் பின்வருமாறு கூறினார்.

முன்னைய காலங்களில் இயற்கையே மக்களை இடம்பெயர வைதத்துக் கொண்டிருந்தது. கொடிய நோய்கள், பஞ்சம், சூறாவளி, பூகம்பம் ஆகியவற்றினால் மக்கள் இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளனர். இடம்பெயரும் மக்கள் தாம் தங்கியுள்ள பகுதிகளையே சொந்த இடமாகக் கருதி வாழ்ந்துள்ளனர். இயற்கையின் சீற்றங்களை எக்காலத்திலும் கண்டிராத யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அண்மைக் காலமாக ஏற்படும் இடப் பெயர்வுகள் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. யாழ்.மக்களுக்கு ஏற்படும் இந்த இடப்பெயர்வுகளும் இழப்புகளும் நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன - என்றார். ☆



அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜேர்மன் தூதர் இனுவிலில் ஜீ.ரீ.இசற். நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் லோகேஸ் சிமெந்துக் கூரை ஓட்டுத் தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இது.

ஜீ.ரீ.இசற். நிறுவனப் பொறியியலாளர் ஸ்ரீகாந்தா, ஜேர்மன் தூதுவர் ஜேர்ஜன் எலைஸ், ஜீ.ரீ.இசற். குழுத் தலைவர் கல்பா, இவர்களுடன் தொழிற்சாலை முகாமையாளர் லோகேஸ்வரனும் காணப்படுகிறார். (ஐ)

# திருவிழாக்களில் ஒழுக்கம் காத்து சமூகத்திற்கு பெருமை சேர்ப்போம்

## தமிழ்ப் பண்பாட்டு ஆடை, அணிகலன்களே சிறப்பு

இந்து ஆலயங்களின் உற்சவ காலம் இது. இக்காலத்தில் இந்து சமய கலாசாரங்களைப் பேணி, ஏனையோரின் ஏளனத்துக்கு ஆளாகாமல் நடந்து கொள்ளுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் (அகில இலங்கை) சைவ அபிமானிகளைக் கேட்டுள்ளது.

இந்து ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவங்கள் பங்குனி மாதம் முதல் ஆவணி வரையிலுமுள்ள காலங்களில் சிறப்பாக நடைபெறுவது வழமை. இக்காலங்களில் சரித்திரப் பெருமை வாய்ந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், அளவெட்டி கும்பளாவளை விநாயகர் ஆலயம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் போன்றவை மிகச் சிறப்பாக தம் மஹோற்சவங்களை நடத்தி சைவ உலகுக்கு அரும்பெரும் தொண்டாற்றி வருகின்றன.

இந்தப் பெருவிழாக்களில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் பங்கு கொண்டு ஆலயச் சூழல்களில் பல வகையான சரியைத் தொண்டுகள் புரிந்தும், அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் போன்றவற்றை முன்னெடுத்தும் காவடி எடுத்தும், அங்கப் பிரதிஷ்டை போன்ற நேர்த்திகளை நிறைவேற்றியும் இறையருளைப் பெறுகிறார்கள். இதனால் நாமும் எமது வருங்கால சந்ததியினரும் இறைவழி நின்று நேர் வாழ்வு வாழ அவர்கள் முன்மாதிரியாகவும் திகழ்கிறார்கள்.

### சமூகச் சீர்கேடுகள்

இதேவேளை இவ்விழாக் காலங்களில் சான்றோர்களாலும் பெரியோர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாத பலவிதமான சமூகச் சீர்கேடுகளும் கலாசாரச் சீரழிவுகளும் இடம்பெறுவது கண் கூடு. இவ்வாறான சீரழிவுகளினால் பக்தர்களும் சைவ மக்களும் ஆலய பரிபாலகர்களும் மிகவும் மனவேதனைக்கு உள்ளாகிறார்கள். இவற்றைச் செய்தித்தாள்களும் பல முறை வெளிப்படுத்தி இருக்கின்றன.

இவ்வகையான அசௌகரியங்கள் ஏற்படாவண்ணம் நாமும் எமது மதமும் வளர்ச்சியடைய வேண்டுமானால சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படுகின்றது. வியாபார நோக்கோடு நடத்தப்படும் ஸ்தாபனங்களை ஆலய அண்மையில் அமைக்காது தொலைவில் அமைப்பதை ஆலய நிர்வாகம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கேளிக்கை நிகழ்வுகள் நடத்துவதைத் தடைசெய்ய வேண்டும். இவற்றால் வீண் பண விரயமும் அமைதியின்மையும் ஏற்படுகிறது.

ஆலய அண்மையில் மதுபான விற்பனை நிலையங்களையோ புலால விற்பனை நிலையங்களையோ அமைப்பதற்கு ஆலய நிர்வாகம் அனுமதிக்கக் கூடாது. மீறி இந்நிலையங்கள் செயற்படின் ஆலயத்தொண்டர்கள் மூலமாகவோ பொதுமக்கள் மூலமாகவோ இவற்றைத் தடைசெய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழாக் காலங்களில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அதிகளவில் நகைகளை அணிந்து வருவதனால் திருடர்களுக்கு வாய்ப்பளிக்க நேரிடும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். அத்துடன் ஆண்கள், பெண்கள் தமிழ்ப் பண்பாட்டை பிரதிபலிக்கும் ஆடைகளை அணிவது வரவேற்கத்தக்கது. தலைவிரி கோலமாக ஆலயத்திற்கு செல்வதைத் தவிர்த்து தெயவீக எழிற்கோலத்தில் எமது கலாசாரத்திற்கு அமைய படாடோபமின்றி பங்கு கொள்வது விரும்பத்தக்கது.

தெய்வீகச் சிந்தனை தவிர்ந்த வேறு ஈனச் செய்கைகளில் ஈடுபடாது அமைதி பேணுதல் மிக அவசியம். எவ்விதமேனும் ஆலய ஒழுங்குகளுக்கு மாசு ஏற்படாவண்ணம் நடந்து பக்தர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஒழுக்கமுடன் செயற்பட உறுதி பூண்டு ஒழுகி வருவதன் மூலம் வேற்று மதத்தினர் நம்மை கீழ்த்தரமாக எண்ணிக் கேலி செய்வதில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

இவற்றைக் கருத்திற் கொண்டு எம்மையும் எமது மதத்தையும் எமது சமூகத்தையும் மேம்படுத்த உதவுமாறு சைவ நன்மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதோடு இந்நடைமுறைகளைக் கண்காணிக்க ஆலய அறங்காவலர்கள், பரிபாலன சபையினர், குருமார்கள், வழிபாட்டாளர்கள் அனைவரும் முனைப்புடன் செயற்படுவது தலையாய கடமையாகும்.

இக்கடமைகளை முன்னெடுப்பதற்கு அந்தந்த ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேச சபைகளினதும் இந்து சமய அமைப்புக்களினதும் கண்காணிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

இது விடயத்தில் வலி.மேற்கு இந்து ஆலயங்களில் மகா சபையின் போசகர் நதிரிலோகநாதனின் முயற்சி வெற்றிகா வேண்டும். ✪



வடமராட்சிப் பகுதியில் உள்ள வல்வெட்டித்துறையில் இருந்து, பருத்தித்துறைக்குச் செல்லும் பிரதான வீதியில், திக்கம் சந்திக்கு அருகில், பாலத்துக்கு மேலாகச் செல்லும் வீதியின் அருகே கடல் அரிப்பால் பெரும் குழி காணப்படுகின்றது. இப்பகுதி ஊடாகப் பயணம் செய்வோர் இதனால் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

சேதமடைந்திருக்கும் வீதிப் பகுதியை மேலே உள்ள படத்தில் காணலாம். (ஐ-109)

## மகிழ்ச்சி ~ பாராட்டுக்கள் ~ வாழ்த்துக்கள்



### செல்வன் செ.பிரசாத்

என்னிடம் தனிப்பட்ட ரீதியில் ஈராண்டுகள் ஆங்கில இலக்கியம் பயின்றவரும் எனது உறவினரும் கிராமத்தவருமான செல்வன் செல்லத்துரை பிரசாத் (யாழ்.இந்துவின் மைந்தன்) பத்துப் பாடங்களிலும் Distinctions பெறுபேறு பெற்றமையை உவகையுடன் பாராட்டுகிறேன் . கல்விப் பயணத்தில் பூரண வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

ஆங்கில இலக்கிய ஆசிரியர்
**க.வேல்தஞ்சன்**
கந்தரோடை, சுன்னாகம்.

(85893)

---

நீங்காத நினைவுகளில்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 02 - 1940

மறைவு 27 - 03 - 1999

### அமரர் நடராசா தங்கராசா

(முன்னாள் செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி - கிழக்குப் பிராந்தியம்)

**திதி : பூர்வபக்க ஏகாதசி 04-04-2001**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய்
ஆதரவுக்கு அணிகலனாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எமையெல்லாம் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே!
ஈராண்டு மறைந்திடினும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சில் நீங்காதனவே!!

*ஓம் சாந்தி!*

*பிரிவால் துயருறும்:* **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

*இல.17/10, சந்தனமாதாகோயில் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

(85905)

---

## ஐடியல் அக்கடமி

**சண்டிலிப்பாய்.**

**O/L DAY CLASS 2001**

**பிரிவு 1**

ஆரம்பம்:-நாளை (2001-03-28) புதன்
காலை 8.30 மணி
எமது வழமையான ஆசிரியர் குழு.

- நிர்வாகி.

(C/15906)

---

## சமாசம் அங்குரார்ப்பணம்

சண்டிலிப்பாய்,மார்ச்27

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இப்பிரிவில் இயங்கி வரும் 16 கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும், 8 மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் பிரதிநிதிகள் பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் வடக்குக் கிராம அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராஜா தெரிவித்தார். (ஐ-135)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்27

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செயற்பாட்டறை மற்றும் விவசாயக்களம் ஆகியன இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளன. (க-10)

## வளை விழுந்து இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

பந்தல் போடும் போது அறுந்து விழுந்த வளையினால் இருவர் காலிலும், தலையிலும் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணை முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழாவை முன்னிட்டு கோயில் முன்றிலில் கடந்த சனிக்கிழமை இரவு பந்தல் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போதே திடீரென வளை அறுந்து வீழ்ந்தது.

இதனால் இதே இடத்தைச் சேர்ந்தவர்களான சி.நடராஜா (வயது 60) காலிலும், அ.சுபாஸ்கர் (வயது 15) என்பவர் தலையிலும் படுகாயமடைந்தனர். (க-9-10)

## கிராம அலுவலரின் அலுவலகம் திறப்பு

அரியாலை,மார்ச்27

பாஷையூர் கிழக்கு கிராம உத்தியோகத்தரின் அலுவலகம் ஒன்று கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.(ஐ-17)

---

## கணக்கீடு

B.முகுந்தன்
B.B.A(HONS)F.m.(SPL).

**A/L 2002**

பங்குடைமை

*ஆரம்பம்:* இன்று 27-03-2001
3.30 (ப.நே)

பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்

(85883)

---

உ

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் பங்குனி மாதம்15ஆம் நாள் நாளை (28-03-2001) புதன்கிழமை பூர்வபக்க சதுர்த்தி திதியும் பரணி நட்சத்திரமும் சித்த அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 10.48 மணி முதல் 12 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| திரு.திருமதி தர்மராசா தம்பதிகளின் | திரு. திருமதி சீனிவாசகம் தம்பதிகளின் |
|---|---|
| ஏக புதல்வன் | கனிஷ்ட புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **தர்மகுலசிங்கம் (குலம்)** | **விதுப்பிரியா (பிரியா)** |



ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*29-03-2001 அன்று மணமகன் இல்லத்தில் பி.ப.4 மணிக்கு நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.*

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

**திரு.திருமதி பா.சிவநேசன் குடும்பத்தினர்**
*விஸ்வகுல ஒழுங்கை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

**திரு. திருமதி சீனிவாசகம் குடும்பத்தினர்**
*62, புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு, கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*

(இருவீட்டார் அழைப்பு)

(85887)

---

## தேவை

TYPE SETTING அனுபவம் உடையவர்கள் தேவை. PAGE MAKER 6.5 அல்லது COREL DRAW 9 முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, முன் அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம் ஆகிய விவரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05-04-2001.**

விளம்பர இலக்கம் - 1246,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(C/15889)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.நாகலிங்கம் அருட்சோதி S.L.P.S.II

(அதிபர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்)

**அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் II க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் சிறப்புற வேண்டுமென மானமார வாழ்த்துகிறோம்.**

ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
**யா/நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்.**

(85901)

---

## காணி விற்பனைக்கு

**கிணற்றுடன் கூடிய 3 பரப்பு , 10 குழி காணி கண்டி வீதியில் கச்சேரிக்கும் றெயில்வே ட்றக்குக்கும் இடையில் விற்பனைக்கு உண்டு. தினமும் மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் தொடர்புகொள்ளவும்.**

**செ.சிவலிங்கம்,**
'ஜனனோதயம்'
செல்வராசா அவெனியூ,
அம்மன் வீதி, திருநெல்வேலி.

(85842)

---

## மூன்றாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 26 - 12 - 1942

மறைவு 30 - 03 - 1998

அமரர்

### சுப்பிரமணியம் இரத்தினராசா

*(முன்னாள் கல்விப் பணிப்பாளர், வலயம்-1)*

**திதி: 27.03.2001**

கண்ட கனவினில் ஒன்று
கனிந்து வந்த வேளையினில்
காத்திருந்த கண்கள் கண்துஞ்சிவிட்டன!
ஊனக் கண் காணாவிடினும்
ஞானக் கண் காணாதோ?

**"மாணிக்கம்"**
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தங்கள் நினைவுடன்,
**- மனைவி, பிள்ளைகள்.**

(85806)

# கண்களைப் பாதுகாக்க அதிக கவனம் எடுங்கள்!

எண்சாண் உடம்புக்கு கண்ணே, பிரதானமான புலன் உறுப்பு ஆகும். கண்கெடுவது மனிதரை உலகின் இன்பங்களை அனுபவிக்க இயலாத நிலைக்குத் தள்ளிவிடும். வாழ்க்கையைத் துன்பமயம் ஆக்கிவிடும். எமது கவனயீன நடவடிக்கைகளால் கண்களைக் கெடுத்துப் பார்வையை இழப்பது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்.

மரக்கறிகள், தானியங்கள் போன்றவற்றை பூச்சிகள், புழுக்கள், நுண்ணுயிர்கள் போன்றவற்றின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் விசிறப்படும், தெளிக்கப்படும் சந்தர்ப்பங்களில் காற்று வீசும் திசையைக் கட்டாயமாக கவனிக்க வேண்டும். கவனயீனமாக காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் நின்று மருந்துகளைத் தெளிக்கும் போது கண்ணில் அம்மருந்துகள் படுவதனால், கருவிழியில் புண் ஏற்பட்டுப் பார்வையிழக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

### மரக்கறிகளில் நஞ்சு

பரம்பரையாக மாத்திரமன்றி, இரசாயனப்பொருள்களால் இன்சுலினைச் சுரக்கும் இலங்குகான் சிறுதீவுகள் பாதிக்கப்படும் போது சலரோகம் ஏற்படும். மரக்கறிகளுக்கும் கீரைகளுக்கும் மருந்துகளைத் தெளிக்கும் போது, எந்த அளவில் அந்த மருந்தை நீருடன் கலந்து, செறிவைக் குறைத்துத் தெளிக்க வேண்டும் என, மருந்துப் போத்தல்களில் குறிக்கப்பட்டிருக்கும். அந்த அளவை வாசித்து அறிந்து, உரிய அளவைப் பயன்படுத்தாது அதிக செறிவு கொண்ட மருந்துகளைத் தெளிக்கின்றனர். ஒவ்வொரு மருந்துக்கும் அது தெளிக்கப்பட்டு, மருந்தின் சக்தி குறையும் நாள்கள் வேறுபடும். இதனை அனேகமான விவசாயிகள் கவனத்தில் எடுப்பதில்லை. குறுகிய காலத்தில் அறுவடை செய்யப்படும் மரக்கறிகளுக்கு நீண்ட ஆயுள கொண்ட மருந்துகளைக் கவனயீனமாக விசிறிவிட்டு, அவற்றை விரைவாக அறுவடை செய்து சந்தைக்குக் கொண்டு வரும்போது, அந்த மரக்கறிகள் நஞ்சைக் கொண்டிருக்கும். அவை உடனடியாக மனிதனைக் கொல்லாவிடினும், உடலின் சில உறுப்புக்களைப் பாதித்து மனிதரை மெதுவாகக்



கொல்லும் நோய்களை உருவாக்கும். மரக்கறியை உண்ணும் போது, அதிலுள்ள நஞ்சையும் சேர்த்து உண்பதால், இன்சுலினைச் சுரக்கும் இலங்குகான் சிறுதீவுகள் அழிவதால், இன்று பெரும் தொகையானோர் சலரோக நோயாளிகள் ஆகிவிட்டனர். சலரோக நோயாளிகளுக்கு கண்ணினுள் இரத்தம் கசிவது, விழித்திரை கிழிவது உட்பட கண்ணில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுப் பார்வை பறிபோகிறது.

### ஆபத்தான ஊசிகள்

சலரோக நோயாளிகளுள் ஒரு பிரிவினர் கட்டாயமாக இன்சுலினை நாள்தோறும் தமக்குத்தாமே ஊசி மூலம் ஏற்றுகின்றனர். சிலர் உறவினர்களைக் கொண்டு இன்சுலின் ஊசிமருந்தை ஏற்றுவிக்கின்றனர். ஒவ்வொரு முறையும் ஊசி ஏற்றுவதற்குப் பயன்படுத்திய பிளாஸ்ரிக் சிறிஞ்சுகளை, ஊசிகளுடன் கண்டபடி எறிந்து விடுகின்றனர். சிறுவர்கள் இவற்றை எடுத்து, ஒருவருக்கு ஒருவர் முகத்தில் தண்ணீர்த்தாரை அடித்து விளையாடுகின்றனர். இவ்வாறு தண்ணீர்த்தாரை அடிப்பதற்குப் பயன்படுத்தும் நீரில் ஊசியின் சிறுதுவாரத்தை அடைக்கக்கூடிய பொருள்கள் இருந்து ஊசியை அடைக்கும் போது சிறிஞ்சிலுள்ள நீரின் மீது பிரயோகிக் கப்படும் விசை ஊசியைக் கழற்றிவிடுகின்றது. விசையுடன் கழன்று செல்லும் ஊசி கண்ணில் தைத்துக் கண்ணில் புண் ஏற்படுவதாலும் கண் வில்லை கிழிவதனாலும் பார்வை இழப்பு ஏற்படுகிறது.

### சுண்ணாம்பு

பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு வெற்றிலை மெல்வோரால் பயன்படுத்தப்படும் சுண்ணாம்பைச் சிறுவர்கள் எடுத்துப் பிதுக்கிப் பார்க்கும் போது, சுண்ணாம்பு கண்ணில் பட்டால் கண்ணில் புண் ஏற்பட்டுப் பார்வை பறிபோகிறது.

தாவரங்களை வெட்டும்போதும், தேமா போன்ற உயர்ந்த பூமரங்களின் கீழே நின்று பூக்களைப் பறிக்கும் போதும், பப்பாசி போன்ற உயர்ந்த மரங்களின் கீழே நின்று பழங்களைப் பறிக்கும் போதும் கண்ணில் பால்த்துளி வீழ்வதாலும் கண்ணில் புண் ஏற்பட்டுப் பார்வை பறிபோகின்றது.

இராமாயணம் போன்ற நாடகங்களில், அம்பு வில் பயன்படுத்திச் சண்டை நிகழ்வதைப் பார்த்த சிறுவர்கள், ஈர்க்குகளை அம்புகளாகப் பயன்படுத்திச் சண்டையிடும் போது அம்புகள் கண்ணில் ஏறுவதாலும், கிட்டி விளையாட்டில் கிட்டிப் பொல் கண்ணில் அடிப்பதாலும் பார்வை பறிபோகிறது.

'ஸ்பிறிங் வில்லுத்தகடு', 'இரப்பர் பாண்ட்' போன்ற விரைவு மீள் தன்மை கொண்ட பொருள்களைக் கவனயீனமாகக் கையாளும் போதும், இரும்பு ஆணிகள், கம்பிகள், தகடுகள் போன்றவற்றை வெட்டும்போதும் கடைச்சல் தொழில் செய்யப்படும் போதும் விசையுடன் வெளியேறும் உலோகத் துண்டுகள் கண்ணில் ஏறிக் கண்ணில் புண்ணை ஏற்படுத்துவதனாலும், விழி வில்லையைச் சேதப்படுத்துவதாலும் பார்வை பறிபோகிறது.

### 'வெல்டிங்'

'வெல்டிங்' தொழிலில் ஈடுபட்டிருப்போர் பாதுகாப்புக் கண்ணாடி பயன்படுத்தாது 'வெல்டிங்' செய்யும் போது 'வெல்டிங்' தொழிலாளர்களும் அதனை வேடிக்கை பார்க்கும் சிறுவர்களும் பார்வையை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள். 'வெல்டிங்' செய்யும் போது வெளியே வீசப்படும் உருகிய இரும்புத் துகள்கள் 'வெல்டிங்' கண்ணாடியில் ஒட்டுவதால் அதனைத் தொடர்ந்து, பயன்படுத்த முடிவதில்லை எனக் கூறுகிறார்கள். துரிசு(செப்பு சல்பேற்று)க் கரைசலினுள் அக்கண்ணாடியைக் கழற்றிச் சில மணித்தியாலங்கள் அமிழ்த்தி வைத்தால் அதில் ஒட்டியுள்ள இரும்புத்துகள்கள் கரைந்து விடும். அதன் பின்னர் கண்ணாடியைத் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

### வெடி கொளுத்தும் சிறுவர்கள்

சீன வெடி கொளுத்தும் போது விசையுடன் வெளியேறும் களிமண், கடதாசி போன்றவை கண்ணைத் தாக்குகின்றன. சிறுவர்கள் நெருப்புக்குச்சி மருந்தைப் பயன்படுத்தி

## நாளாந்தம் பல வழிகளில் பார்வைக்கு ஆபத்து

தயாரிக்கும் விளையாட்டு வெடி பொருள்களும் கண்களைத் தாக்கி அவர்கள் பார்வை இழப்பதற்கு காரணமாக அமைகின்றன.

பாடசாலை மாணவர்கள் கூரான பென்சில் போன்றவற்றை அவை தேவைப்படாத சந்தர்ப்பங்களிலும் கையில் வைத்திருப்பதால், அருகிலிருக்கும் மாணவரின் கண்களில் குற்றும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுப் பார்வையிழப்பு ஏற்படுகிறது.

வற்கு கொத்துபவர், கல் உடைப்பவர் போன்றோருக்கு அருகில் நின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கும், விசையுடன் வீசப்படும் சிராய்கள், கற்துணிக்கைகள் போன்றவற்றால் கண்ணில் காயம் ஏற்பட்டு பார்வை பறிபோகின்றது. அசுத்தமான குளத்து நீரில் குளிப்பவர்களுக்கும், குளத்து நீரில் காணப்படும் நுண் கிருமிகள் கண்களைத் தாக்குவதால் கண்களில் புண் ஏற்பட்டு பார்வை இழப்பு ஏற்படுகின்றது.

**ச.ஆ.கோபாலமூர்த்தி**

கண்களில் தூசிகள், மண்துணிக்கைகள் போன்றவை வீழும் போது அனேகமாக எல்லோரும் கண்களைக் கசக்குகின்றனர். இவ்வேளையில் கடினமான துணிக்கைகள் மென்மையான கண்ணில் கீறல்களை ஏற்படுத்த அவை புண்களாகின்றன. பின்னர் பார்வையிழப்பிற்கு ஏதுவாக அமைகின்றன. நசுங்கத்தக்க பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ள இரசாயனப் பொருள்களைக் கவனயீனமாகத் திறக்கிறார்கள். இப் போத்தல்களின் மூடியின் கண்ணை நோக்கிய பகுதி முதலில் திறக்கப்படும் போது, போததல் பிதுங்கி, இரசாயனப் பொருள் கண்ணினுள் பாய்ந்து கண்ணைக் கெடுத்து விடுகிறது.

### பெண்களுக்கு....

வெளிற்றும் தூள் (BLEACHING POWDER). குளோரின்தூள் என அழைக்கப்படும் இரசாயனப்பொருள் இன்று பெண்களால் வீடுகளில், சர்வசாதாரணமாகக் கிணற்று முற்றங்கள், குளியலறைகளில் பாசியை அழிப்பதற்கும், சமையலறைத் தொட்டிகளைச் சுத்திகரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இது கண்ணில் பட நேர்ந்தால் கண் விழி அழிக்கப்பட்டு கருவிழியில் புண் ஏற்பட்டுப் பார்வை இழப்பு ஏற்படும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் மிகுந்த அவதானத்துடன் நடந்து கண்களைப் பாதுகாப்போம். பார்வையை வாழ்நாள் முழுவதும் பேணி இயற்கை அழகை ரசித்து மகிழ்வோம்! ★

# தனக்குவமை இல்லாத செல்லப்ப தேசிகர்

எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள் தன் சற்குருவின் பெருமையைக் கூறும்போது தாம் கும்பிடுவதற்கு தனக்குமேலே ஒருவன் இல்லாதவராக இருந்தார் என்று நற்சிந்தனைப் பாடல்களில் பாடியுள்ளார். மனத்தாலும் வாக்காலும் நண்ணவொண்ணா மோன இனத்தினராய் விளங்கியவர் தேரடிச் சித்தரான செல்லப்ப சுவாமிகள். நல்லூரையே பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பரை அவரது பெருமையை அறியாதோர் அவரை விசரனாகக் கருதி நல்லூர் வீதியில் சங்கிலியால் கட்டி வைத்திருந்தபோது, கடையிற்சுவாமிகள் அவ வழியால் வந்தார். கிட்டச்சென்று செல்லப்பரை உற்று நோக்கிய கடையிற் சுவாமிகள், அங்கு நின்றவர்களிடம் "நன்றாக முற்றி விட்டது அவிழ்த்து விடுங்கள்." என்றார்.

கடையிற் சுவாமிகள் பெரிய மகான் என்பதைக் கண்டு அவரை உபசரிக்கும் நோக்கோடு ஒரு நாள் சாரயப் போத்தலுடன் அவரை எதிர் பார்த்த வண்ணம் இருந்தார் செல்லப்பதேசிகர். தூரத்தே கடையிற் சுவாமிகளைக் கண்ட செல்லப்ப தம் வசம் இருந்த சாராயப் போத்தலை எடுத்துப் பார்க்க "அது எப்பவோ முடிந்து விட்டது" என்ற கடையிற் சுவாமிகளின் ஒலியைக் கேட்டுத் தெளிவடைந்தார். அருகே சென்ற செல்லப்பருக்கு கடைக்காரியிடம் ஒரு ரூபா வாங்கி வெற்றிலையில் வைத்து தலையிற் குடையைப் பிடித்து ஆசீர்வதித்தார். இந்நிகழ்வுகளின் பின் செல்லப்ப சுவாமிகளை அவரது சுற்றத்தவர்கள் அவர்இஷ்டப்படியே திரிய விட்டுவிட்டனர்.

செல்லப்ப தேசிகர் வேண்டுமென்றே விசரன் போல் நடித்துள்ளார். அவர் யோகர் சுவாமிகளுக்கு ஒரு முறை சொன்னாராம். "செல்லப்பன் இங்கு என்ன சாமி, தம்பிரான் என்றெல்லாம் பேர் விட்டுச் சாகான். ஒரு விசரன் நாய் போல் வீட்டுக்கு வீடு வாங்கித் தின்கிறான். செத்துப் போனான் என்று சொல்ல விட்டுத் தான் சாவான்"- என்று.

மேலும், சாமி பண்ணாதே, சாமி பண்ணினால் யாழ்ப்பாணத்தார் தலை மேலேறி மிதித்து விடுவார்கள் என்று எச்சரிக்கையும் செய்தாராம். செல்லப்பர் தாம் பூண்ட விசர்க் கோலத்தை செம்மையாகவே நடித்தனர். இதனை யோகர் சுவாமிகள் தம் அடியவர் ஒருவருக்கு "செல்லப்பர் நாற்பது வருடங்களாக தாம் எடுத்த கோலத்தை எவருக்கும் பிடி கொடுக்காமல் நடித்துக் காட்டிவிட்டுப் போனார்" என்று கூறினார்.



யோகர் சுவாமிகள் தம் குருவைப்பற்றிக் கூறும்போது: தாந்திரீக ஒழுக்கத்தினரான கடையிற் சுவாமிகள் கூட சித்து வசியங்களில் அகப்பட்டுக் கொண்டார். ஆனால் செல்லப்ப தேசிகரோ இப்படியான மயக்கங்களில் அகப்படவில்லை. எல்லாம எப்பவோ முடிந்த காரியம். நாமறியோம் என்று பிதற்றிக் கொண்டு திரிவார். யாராவது செல்லப்பரை வணங்க வந்தால் உடனே விரைந்து கலங்களிக்கும் இடங்களிலே நின்று தன்னை யாரும் வழிபட முடியாதபடி செய்துவிடுவார் என்றார்.

செல்லப்பர் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் சிலரை தமது தெய்வீகப் பித்தை அறியுமாறு கிட்ட நெருங்க விட்டார். ஒரு நாள் செல்லப்பரிடம் கிட்ட நெருங்கிய எங்கள் யோகர் சுவாமிகள் கிடுகிடென நடுங்கியே விட்டார். தேர்முட்டிப் படிமேலே சிங்காரமாய் படுத்திருந்த செல்லப்பர் இளைஞரான யோகரை நோக்கி "யாரடா நீ" என்றார். இந்த அதட்டலே யோகருக்கு அருளாக அமைந்தது. அப்பொழுது யோகர் இரணமடுவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்தார். ஆனால் செல்லப்பர் அவருக்கு ஞானதாகத்தை ஏற்படுத்தியதால் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்து செல்லப்பரை பின்தொடர்ந்தார்.

### யோகர்சுவாமிகளை பரிபக்குவப்படுத்தினார்

செல்லப்பரை அண்டிய யோக முனிவரை தங்கத்தை புடம்போட்டு எடுப்பது போல பல பல சோதனைகளை உண்டாக்கி பரிபக்குவப்படுத்தினார்.

"கீரிமலைக்கு குளிக்கப் போவோம வா" என்று இளைஞர் யோகரை அழைத்துச் செல்வார். கீரிமலையை அடைந்ததும் குளிக்காமலேயே "குளித்தாயிற்று" வா என வந்த வேகத்திலே இருவரும் திரும்பிவிடுவர். இருவரும் பக்குவமாக சமைப்பார்கள் சமையல் முடிந்ததும் வயிற்றைப் பார்த்துவிட்டு "இன்று நீ பட்டினி" என சட்டி பானையை உடைப்பார். நடு வெயில் இருவரும் பட்டணத்துக் கடைகளில் பிச்சையெடுக்க மணிக் கணக்கில் நிற்பர். ஒரு நாள் யோக சுவாமிகள் செல்லப்பரைப் பார்த்து "உப்பிடிக் கஷ்டப்பட்டு ஒரு சதம் சம்பாதிக்க வேண்டுமோ வென" கேட்டாராம். உடனே செல் லப்பர் "உனக்குத் தெரியுமோ இதுவல்லோ அருமையான சம்பாத்தியம் பிதா தந்தாரே! போனகமென்பது தானுழந்துண்ணல் என்பதல்லவா ஔவையார் வாக்கு" என்று மறுமொழி கூறினாராம். இப்படியாக யோக குருவின் கூத்தாடும் மனதை அடக்கி நல்லூர் தேரடியில் இருத்தினார் செல்லப்பர்.

இவ்வாறாக நாற்பது நாள்களின் பின் "ஆசான் அருளால் ஆசான் ஆகினேன்" என்று குருவின் ஆசிகளைப் பெற்று தனது பரிவிராசக வாழ்வை கதிர்காம யாத்திரை செல்வதன் மூலம் ஆரம்பித்தார் யோகர். அவரைப்பற்றி உறவினர்கள் செல்லப்பரிடம் விசாரித்த போது "யோகர் செததே போய்விட்டான்" என்று கூறினார்.

**இன்று அவரது எண்பத்தாறாவது குருபூசைத் தினம்**

ஒருமுறை கொழும்புத்துறை விதானையார் யோக சுவாமிகளிடம் "செல்லப்பர் உங்களிடம் எல்லாவற்றையும் உங்களிடம் கொட்டிப்போட்டுப் போய்விட்டார்" எனக் கூறினார். அப்போது சுவாமிகள் "நீங்களானால் செல்லப்பருடன் ஒருநாள் கூடத் தாக்குப் பிடிக்க மாட்டீர்கள். நான் செல்லப்பரிடம் சும்மாவா போறேன். மலையை வெட்டியல்லவா பெற்றேன்" என்றாராம்.

### பிதற்றலில் கிடைத்த மகாவாக்கியங்கள்

"பாரையனே கடைக்கண்ணால் பாரையனே" என்று செல்லப்பர் மணிக் கணக்காக பொறுமையுடன் காத்திருந்து செல்லப்பரின் பிதற்றல்களுக்கு இடையில்வரும் மணிகளையும் மகா வாக்கியங்களையும் பெற எங்கள் குருநாதன் பட்டபாட்டை யாரறிவார்!

செல்லப்பரும் நல்லூர் முருகனும் ஒருவரே என்பதை யோகர் உணர்ந்தார். செல்லப்பர் நல்லூர் தேரடியில் யோகரை நோக்கி "தேரடா உள் தீரடா பற்று" என்றார். யோகரும் "அருமருந்து ஒரு குரு மருந்து" என அள்ளி அள்ளிப் பருகினார்.

**"நல்லூரான்"**

யோகர் சுவாமிகள் இறைவனும் தம் சற்குருவும் ஒருவரே என தெளிவாகக் கண்டார். இரு வினையால் மதிமயங்கிக் கிடக்கும் தன்னை கருணையினால் ஆண்டுகொள்ள கடவுள் திருவுளங்கொண்டு அருள் மேனி தாங்கி திருவாரும் நல்லைநகர் தேரடியில் இருந்த செல்லப்ப ஆசானே அவன் என உணர்ந்தார்.

ஒரு நாள் செல்லப்பர் சுகவீனமாக இருப்பதை அறிந்த சிவயோகர் தம் குருவை மற்றவர் போல பார்க்க சென்று படலையைத் திறந்தார் "யாரடா படலையில்" என்ற கர்ச்சனையைக் கேட்டு வந்த வழியே திரும்பினார். ஆசானை இருந்த இடத்திலேயே அகக் கண்ணால் தரிசித்தார்.

செல்லப்பர் தனது வேடத்தைக் கலைக்கும் நாளன்று தம்முடன் உறங்குகின்ற அயலவரொருவரிடம் இன்று இரவு இங்கு ஒரு புதினம் நடக்கும் நீ வருவையோ?' எனக் கேட்டார். ஆனால் அவ்வடியவருக்கு அன்றிரவு செல்ல முடியாததால் அடுத்த நாள் காலையில் சென்று பார்த்த போது செல்லப்பர் ஒரு சிறு குழந்தை போன்று விரலொன்றை வாயில் வைததவாறு காலொன்றையும் மடித்து நடராச பாவத்தில் காட்சியளித்த வாறு காணப்பட்டார்.

செல்லப்ப ஆசான் விதேக முத்தியடைந்து எண்பத்தாறாவது வருடங்களாகி இன்று அவரது குருபூசை நன்னாளில் அவரின் திருவடிகளை வணங்கி இன்புறுவோம்.... ☆

**MATHS CENTRE**

M.M.V.Road – NELLIADY

A/L - 2003 கலை

ஆரம்பம்:– 28.03.2001 புதன் 3.00 p.m. (ப.நே.)

ECO. ☆ திரு.அன்ரனி — Logic ☆ திரு.பிரபானந்தன்

Hi.Cu. ☆ திரு.ராஜேஸ்கண்ணன் — TAMIL ☆ திரு.அகிலன்

DRAMA ☆ திரு.பிரதீபன் — PO.Sc. ☆ திரு.சந்துரு

GEO. ☆ திரு.கிருஸ்ணராசா

(85840)



குருநகர் வாழ் மக்களின் உறவுப் பாலமாக அமைந்து செயறபடும்

**R.R.K.**
**தொலைத்தொடர்பகம்**

*இன்று தனது ஓராண்டு சேவையை நிறைவு செய்கின்றது.*

ஓராண்டுதனைப் பூர்த்தி செய்யும் R.R.K. தொலைத் தொடர்பகம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றது.

R.R.K.
தொலைத்தொடர்பகம்
24/3, மத்திய கிழக்கு் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**இன்று (27-03-2001) செவ்வாய்க்கிழமை உள்வரும் அழைப்புகள் இலவசம்!**

**வெளியே போகும் அழைப்புகள் அரைக்கட்டணம்!!**

உள்நாடு - 021-3514

வெளிநாடு - 009421-3514

"உங்கள் தேவையே எங்கள் சேவை"

(C/15502)


# 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 10 - 08 - 1910

மறைவு 25 - 02 - 2001

**திருமதி நல்லதம்பி நல்லம்மா அவர்கள்**

பேரியைந்த நல்லதம்பி நல்லம்மா மேன்மை மிக்காய்
அனைவரொடும் பேரன்புள்ளாய்!
ஊரியைந்த உறவினரும் உன்னருமை
மைந்தர் நாமும் உள்ளம் சோர்ந்தது
நீரியைந்த கண்ணினராய் நின்ற ஏற்ற
நின்னிறுதிக் கடமையதை
ஆற்றியிட விதியாச்சே. தம்பி
நல்லலிங்கம் என்ற சொல் கேட்பதெப்போ?

எமது குடும்பத்தின் விலைமதிக்க முடியாத மாணிக்க மாமலையின் மறைவு கேட்டு உடனே நாடி ஓடிவந்து உதவிய உறவினர்க்கும், அயலவர்க்கும் மேலும் விரைந்து உதவிகள் பல புரிந்த நண்பர்களுக்கும், எமது துயரிற் கலந்து கொண்டு ஆறுதல்மொழி பல கூறி எம்மைத் தேற்றியோர்க்கும், எமது நன்றியைத் தெரிவித்து இன்று (27.03.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.*

- குடும்பத்தினர்.

(C/15888)

## மதுவரி அத்தியட்சகர் பரீட்சை

தென்மராட்சி,மார்ச்27

மதுவரித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட மதுவரி அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மதுவரித் திணைக்களத்தில் பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்த பிரதான மதுவரி பரிசோதகர் (CHIEF EXCISE INSPECTOR), சிரேஷ்ட மதுவரி பரிசோதகர் (SENIOR EXCISE INSPECTOR) ஆகியோர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் வெற்றிடமாகவுள்ள மூன்று பதவிகளுக்கு 20 தமிழர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும், இலங்கை முழுவதும் 19 சிரேஷ்ட மதுவரி அத்தியட்சகர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் இப் பதவிகள் சேவை மூப்பு அடிப்படையில் நிரப்பப்பட்டு வந்ததா கவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-31-117)

## தாக்கப்பட்ட நபர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்27

மாதகல் வீதியில் அடிகாயங்களுடன் கிடந்த குடும்பஸ்தர் ஒருவர் பிரயாணிகளால் அழைத்துவரப்பட்டு யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தபாலகச் சந்தி மாதகலைச் சேர்ந்த ஜோசப் எமிலியன் சிங்கம் (வயது-31) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மதுபோதையில் வந்த தன்னை இருவர் கடுமையாகத் தாக்கிவிட்டு வீதியில் போட்டுச் சென்று விட்டதாக காயமடைந்தவர் தெரிவித்தார்.

(ஐ-6-ரி)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை தாவடி தெற்கில் இடம்பெற்ற இந்த விபத்தில் நாவற்குழியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது தாவடியில் வசித்து வருகின்ற திருமதி தவராஜினி சுவீந்திரராஜா (வயது-25) என்பவரே கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் அந்த இடத்தை விட்டுத் தப்பிச் சென்று விட்டது. காயமடைந்த பெண்ணை அயலவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

(ஐ-10-9)

## சைக்கிள் திருட்டு

வலி,வடக்கு,மார்ச்27

இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் தனது சைக்கிளை நிறுத்தி விட்டு வீடுபார்க்கச் சென்றவரின் சையிக்கிள் திருட்டுப் போயுள்ளது.

அரியாலை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த. ஒருவரே தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற சமயம் சைக்கிளைப் பறிகொடுத்தார்.(உ-ஒ)

## பல்கலைக்கழகத்தில் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுப் பேருரை நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறும்.

பேராசிரியர் கே.கந்தசாமி "இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சேதன பகுதி நிலைக் கடத்திகள்" என்ற பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

(உ-ஒ)

# கோழிக் குஞ்சுகளின் விலை அதிகரிப்பு

அச்சுவேலி,மார்ச்27

அச்சுவேலி கைத் தொழில் பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இருந்து விநியோகிக்கப்படும் கோழிக்குஞ்சின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் யாழ்.மாவட்டக் கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்ட வேளையில் -

சேவல் - பேடு என இனம்பிரிக்கப்படாத நிலையில் குஞ்சு ஒன்று 22.ரூபா 50 சதம் வீதமும்.

சேவல் - பேடு என இனம் பிரிக்கப்பட்ட குஞ்சுகளில் சேவல் குஞ்சு ஒன்று ஐந்து ரூபா வீதமும், பேட்டுக் குஞ்சு ஒன்று 35 ரூபா வீதமும் - விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தை யாழ்.மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் சமாசம் பொறுப்பேற்று நிர்வகிக்கத் தொடங்கியுள்ளது.

தற்பொழுது நிலையத்தில் இருந்து பேட்டுக்குஞ்சு 39 ரூபா வீதமும் சேவல் குஞ்சு 9 ரூபா வீதமும் கால்நடை வளர்ப்பபோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மொத்தமாக வழங்கப்படுகின்றது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பேட்டுக் குஞ்சுகளை 40 ரூபா வீதமும் சேவல குஞ்சுகளை 10 ரூபா வீத மும் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-11)

# கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் 2 இடங்களில்

## புதிதாக அமைப்பதற்கு ஏற்பாடு

அச்சுவேலி,மார்ச்26

யாழ்.மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமான 'பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம்' நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய்த் தொகுதியிலும், வட்டுக்கோட்டைத் தொகுதயிலும் இந்த அலுவலகங்கள் நிறுவப்படவுள்ளன. கட்டடம் ஒன்றிற்கு பதினேழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதம் 35 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கான அலுவலகம் கோப்பாய் தொகுதயில் நிலாவரையில் கமநல சேவை நிலையத்திற்கு அருகில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலத்தில் நிறுவப்படவுள்ளது.

தற்பொழுது நீர்வேலியில் செயற்பட்டு வரும் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பதிலாக அச்சுவேலி - புத்தூர் பகுதியில் பொருத்தமான ஓர் இடத்தில் அலுவலகத்தை நிறுவுவதற்கு முயற்சிக்கப்பட்டது ஆனால் காணி வசதி இல்லாமையினால் நிலாவரையில் அதனை நிறுவுவதற்கு தற்போது ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. (உ-11)

## கிராம அலுவலர் தர உயர்வுக்கான போட்டிப் பரீட்சை

தென்மராட்சி,மார்ச்27

கிராம அலுவலர்களை அதி சிறப்புத் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் க்ல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் I ஐச் சேர்ந்த கிராம அலுவலர்களை அதிசிறப்புத் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான பரீட்சை ஏற்கனவேநடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-117)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 11 - 08 - 1961

உதிர்வு 20 - 03 - 1999

**அமரர் நடராசா ரவீந்திரராசா**

*(தபாலக ஊழியர் - மானிப்பாய்)*

திதி:- துதியை - 27.03.2001)

ஆண்டுகள் இரண்டு கடந்து ஆறாக விழிகளில் வடிகின்ற
கண்ணீரில் வேதனைக்குள் ஒளிச்
சுடராகித் திகழும் எங்கள் அப்பா!
சோதனைகள் இப்படியா சொல்லுங்கள்?
கொடுமைகளுக்கு இப்பலம் பரமன் கொடுப்பதுவோ?
பாதம் கழுவும் விழியாலும் ஆறுமோ?
கண்ணீர் மணி தூவி கை கூப்பி
வணங்கி நிற்கின்றோம்!

உங்களை நினைவு கூரும்:-
அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மாமன், மாமி,
மச்சான், மச்சாள், மைத்துனர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*நவக்கிரி,*
*புத்தூர்.*

(85730)


*மாபெரும் மலிவு விற்பனை!*

புத்தாண்டை முன்னிட்டு அனைத்துப் புடைவை ரகங்களும் உங்கள் மனம் போல் தெரிவுசெய்து மலிவுவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**விநாயகர் புடைவையகம்**

இல.63 A. 62 A.61,
நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C-1575)

# ஆற்றுகையின் வடிவ மாறுதல்கள் வரையறையின்றிச் செல்கின்றனவா?

அ. விஜயநாதன்
நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### உலக நாடக தினம் உருப்பெற்றமை

**1948இல் யுனெஸ்கோ (Unesco) அமைப்பும் சர்வதேச அரங்க சமூகமும் (International Theatre Community - ITC) சேர்ந்து சர்வதேச அரங்க நிறுவனம் -(International Theatre Institute ITI) ஒன்றை உருவாக்கிக் கொண்டன. 1962 முதன் முதலில் உலக நாடக நாள் இவ்வமைப்பால் பிரகடனப்படுத்தப் பட்டது. 1996 இலிருந்து யுனெஸ்கோவின் முறைசார்ந்த அமைப்பாக அது செயற்படுகிறது.**

அரங்கானது தான் கொண்டுள்ள வியாபகப் பெறுமானங்களுக்கு ஏற்ப தன்னை வடிவமைத்துக் கொண்டு வருகின்றது. பல்வேறு தரப்புக்களா லும் அரங்கு பற்றி முன்வைக்கப் படுகின்ற கருதுகோள்கள் அவர்க

**இன்று சர்வதேச நாடக தினம்**

ளின் தத்துவ விசாரங்களை அடி யாகக் கொண்டே அமைகின்றன எனலாம். இந்த நிலையில் அரங்கா னது அடிப்படையில் தான் அடைய முயல்வதற்கான பொருள் கொண்டு தன் பெறுமானத்தைப் பெறுகிறது.

அரங்கியல் சார் விடயங்கள் கற்கைநெறியாக - நாடகமும் அரங் கியலும் என பல்கலைக்கழகம் வரை யான பட்டதாரிப் பயில் முறையாகப் பிரயோகப்படுத்தப்பட்டது முதல் அதன் வீரியம் புதிய வேகம் கொண்டு காணப்படுகின்றது. 80களில் ஆரம் பித்த அரங்கியல் அணுகுமுறைகள், அவற்றின் விரிவாக்கங்கள் என்பன அரங்குபெறும் அழகியல் சார் அம்சமானது என்பதற்கு அப்பால் சென்று, அது ஓர் (சாதனம்/ கருவி) உணர்வு வெளிப்பாட்டுக்களம் என்ற நிலையை எட்டியுள்ளதைக் காணமுடி கிறது. இங்கே நடிகன் ஓர் 'கோலம்' கொள்நிலையில் தன்னை வெளிக் காட்டி நிற்கின்றான்.

நாடகம் ஊடாக அணுகப்படுகின்ற விடயங்கள், அவை பற்றி ஆற்று வோர் கொண்டிருக்கவேண்டிய கருத்துநிலை, உணர்வு நிலை என்பன பற்றிய ஆராய்தல்கள் இன் றியமையாத விடயமாகின்றன. இதன் படி ஆற்றுவோரிடையேயான உறவு நிலை, புரிந்து கொள்ளல், ஆளுமை என்பன முக்கியப்படுத்தப்பட்ட விடயங் களாகக் கருதப்பட்டன. அதாவது முரண் தேர்வு நிலையில் - தளை நீங்க நிலையில் - அரங்கின் சாத்தி யப் பாடுகள் பற்றிய ஆராய்வு ஏற்பட டது. அதற்கான அரங்கவேலைத் திட்ட நகர்வின்படி, ஆற்றுகைத் தளத் தில் நம்பிக்கைநிலை, உறவு நிலை, உணர்வு வெளிக்கொணர்கை என் பன இன்றியமையாத அம்சங்களான எடுகோள்கள் ஆயின.

அரங்கியற் செயற்பாடுகளினூ டாக ஏற்படுத்த விளைந்த இந்தப் புரிந்து கொள்ளல் நிலையின் அடிப் படையில், ஒருவர் மற்றவரின் "மனித உறை" நிலையை அறிந்து கொள் வதும், ஒவ்வொருவரும் தம் ஆழ் மன - அடிமன விருப்புக்களை வெளிப்படுத்தல், பகிர்ந்து கொள் ளல் எனும் கருதுகோளின் படி இவற்றிற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுதல் அவசியம். ஆகவே ஒவ்வொரு ஆன்மாவின் தேடல்க ளாக 'ஆன்ம விசாரம்' எனும் உணர் வுப் பகிர்வுக்களமாக அமையும்.

**"அரங்கு உலகத்தை மாற்றவேண்டும்<br>வாழ்வை மாற்ற வேண்டும்<br>வெறும் வெளித்தோற்றத்தைப் போல் அல்லாது<br>ஒருவன் தனது சுய உருவத்தை வெளிக்கொணர<br>அது உதவ வேண்டும்"<br>-பெக்-**

இதை அண்மையில் கைலாசபதி அரங்கில் ஆற்றுகை செய்த 'ஆன்ம விசாரம்' நாடகத்தில் அவதானிக்க லாம். இங்கே நாடகம் என்பது என்ன? நடித்தல் என்பது என்ன? மேடை வெளி என்பது என்ன? போன்ற அம்சங்கள் விவாதத்திற்குரி யனவாகின.

ஆற்றுகை வெளி சம்பந்தமான பிரக்ஞையும், அதில் தன்னை மறந்த நிலையில், தனது ஆத்மாக்கள் சிதைவுறும் நிலையில் உள்ள இன் றைய மானிட வாழ்தல்கள் வெளிக் கொணரப்பட்டது. இதில் 'ஆற்று வோர்' எனக் குறிப்பிடப்பட்டோர் ஒரு குறித்த உணர்வுக் கொதி நிலை யிலும், அதனால் தூண்டற் பேறு பெற்ற பார்ப்போர் இன்னோர் உணர் வுக் கொதி நிலையிலும், இறுதியில் காணப்பட்டார்கள். இதில் உண்மை எது! ஆற்றுவோரால் கட்டமைப்புக் குள் கொண்டுவரப்பட்ட உணர்வு வெளிக்காட்டுதலா? அல்லது பார்ப் போனிடம் இருந்து பீறிட்டு வந்த அவலங்களின் வெளிப்பாடுகள், ஆத் திரங்கள், அசைவுகள் என்பவற்றிற்கு இடையிலான உண்மை உணர்வு நிலைகளா? என்ற சிந்தனைகள் எழுந்து கொண்டன. இங்கே ஒத்தி கைகள் இன்றி அதாவது தனது அடி மன விருப்புக்களிற்கான உணர்வூட் டலுடன், தன்னை, தன் கோரிக் கைகளை முன்வைக்க காத்திருந்த 'ஆற்றிவோர்' எனும் பகுதியினர் தம்மால் நம்பிக்கைக்குரியவர்கள் என அழைக்கப்பட்டோர் (இலக்குப் பார்வையாளர்) மத்தியில் தம்மை வெளிக்காட்டி நின்றனர்.

ஆளை ஆள் நம்பமுடியாத உற வுகள் அற்ற உதிரிகளாக வாழும் சமூக அமைப்பினுள் மனிதத் தன்மை கள் எதையுமே இனங்காண முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும் சூழலில், மிருகங்களாக்கப்பட்ட நிலையில், இனங்காணமுடியாத பயம் பீதியுள் உறைந்து போயுள்ள கலந்து கொண் டோரிடம் மேற்படி அதிர்வொலிகள் எழுந்து கொள்ளுவது இயல்பாக இருப்பினும், அதற்கான ஆற்றுகைக் களத்தை வழங்குதல் என்பது இன் றியமையாத ஒன்றாகவே இருக்கின் றது. பேச மறுக்கப்பட்ட நிலையில் நீடித்த மௌனம், ஓர் உளநோய் நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற கருதுகோளின் அடிப்படையில் அதற் கான தீர்வினை - மாற்று வழியை அரங்கு வேண்டி நிற்கின்றது.

மனித தேவைகளை ஆதாரமா கக் கொண்டே பல்கலைக்கழக அரங் கியற் செயற்பாடுகள் - பல்வேறுபட்ட முயற்சிகளாக மேற்கொள்ளப்படு கின்றன. பல்கலைக்கழகம் என்ற ஆத்ம - அறிவுக்களத்தை ஓர் பாது காப்பான வெளியாகக் கருதி, ஆற் றுகை வடிவங்கள் அமைந்து விடு கின்றன. இதுவே அரங்கின் பாய்ச் சலுக்கு வழிவகுக்கின்றன.



புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் 'பசிப்பிணி மருத்துவன்' கவிதை நூல் வெளியீட்டுவிழா அண்மையில் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைக்கி றார். அருகில் ஆசிரியர் ஆறுதிருமுருகன் உள்ளார். யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் காணப்படுகிறார்.
வெளியீட்டுரை நிகழ்த்திய ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்திடமிருந்து ஓயவுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஹலக் விஸ்வநாதன் முதற் பிரதி பெறுகிறார். நடுவில் நூலாசிரியர் அமர்ந்திருக்கிறார்.

## 5 லட்சம் ரூபா 'ஓவர் ரைம்' பெற்ற அரசாங்க அதிபர்!

தென் இலங்கை அரசாங்க அதிபர் ஒருவர் பிரதி சுங்க ஆணையாளர் நாயகமாகவும் பணியாற்றுகிறார்.

இவர் சுங்கப் பணிகளுக்காக நாளாந்தம் 20 மணித்தியாலம் வீதம் மேலதிக நேரக் கொடுப்பனவு ('ஓவர் ரைம்') பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இவர் எஞ்சியுள்ள 4 மணித்தியாலத்திற்குள்ளேயே அரச அதிபருக் கான கடமையையும் மேற்கொள்ள வேண்டும். அந்த 4 மணித்தியாலத் திற்குள்ளேயே நித்திரையும் கொள்ள வேண்டும்.

ஒரு வரிடத்தில் விடுமுறை தினங்கள் உட்பட 8760 மணித்தியாலங் களே (365 x 24) உள்ளன. இவர் 1998 ஆம் ஆண்டில் 6503 மணித் தியாலங்களும் 1999ஆம் ஆண்டு 6877 மணித்தியாலங்களும் 'ஓவர் ரைம்' தொடர்பான கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளார்.

இவர் 1998இல் 4 லட்சத்து 70 ஆயிரத்து 686 ரூபாவையும் 1999இல் 4 லட்சத்து 97 ஆயிரத்து 485 ரூபாவையும் 'ஓவர் ரைம்' ஆகப் பெற் றுள்ளார்.அரசாங்க அதிபர் பதவிக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப் பனவுகளுக்கு மேலதிகமாகவே மேற்கண்ட கொடுப்பனவுகளைப் பெற் றுள்ளார்.

எந்த ஓர் அரச ஊழியரும் நாளாந்தம் தனது வழமையான கடமை நேரமான 8 மணித்தியாலத்துக்கு மேலதிகமாகப் பணியாற்றும்படி கோரப் பட்டால் மாத்திரமே அவர் அவ்வாறு பணியாற்றும் மேலதிக மணித்தியா லங்களுக்கு 'ஓவர் ரைம்' பெற உரித்துடையவராகிறார்.

கடமையின் நிமித்தம் மாவட்டத்திற்கு வெளியே சென்ற தினங்களி லும் தென்மாகாண சபைக்கான தேர்தலின்போது தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தராகப் பணியாற்றிய தினங்களிலும் இந்த அதிகாரி தின மும் சராசரி 20 மணித்தியாலங்கள் 'ஓவர் ரைம்' வேலையை எப்படிச் செய்தார்? (க)

### வடக்கு, கிழக்கு மாகாண

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு தனியான ஆலோசனைச் சபை

### அமைக்க ஆளுநர் இணக்கம்

கொழும்பு,மார்ச்27

வடக்கு - கிழக்கு, மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கென தனியான ஆலோசனைச்சபை ஒன்றை நியமிக்க மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா இணங்கியுள்ளார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்லோகநாதன் ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆலோசனைச்சபையை அமைக்க ஆளுநர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் கடந்த புதனன்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற் றது. 8 தொழிற்சங்கங்கள் பங்குபற் றிய இக்கூட்டத்தில் ஆளுநர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியசர்மா, உள்ளூராட்சி ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் உட்பட உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அரச ஊழியர்களுக்கு காணி வழங்கும் திட்டத்துக்கு ஆதரவு நல்கு வதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அமைய எழுதுநர், தட்டெழுத்தாளர், தரவு பதிவு இயக் குநர் ஆகியோரை நிரந்தரமாக்க வேண்டுமென சங்கம் கோரியுள்ளது. பொதுநிர்வாக அமைச்சில் கடந்த கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற பேச்சுகளில் சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத் தவும் உள்ளூராட்சி ஆணையாள ரோடு கடந்த 20 ஆம் திகதி நடத் திய பேச்சுவார்த்தையில் சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகளை நிறை வேற்றுமாறும் லோகநாதன் ஆளுந ரைக் கேட்டுக்கொண்டார். (ம)

## அரசியல் கட்சியின் பெயரில் லண்டனில் புலிகள் செயற்பாடு

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டதை அடுத்து அங்குள்ள புலிகளது அலு வலகங்கள் அனைத்தும் அவர்களது அரசியல் கட்சியான விடுதலைப் புலி களின் மக்கள் முன்னணி என்ற பெய ரில் மீண்டும் இயங்கத் தொடங்கி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டாலும் அவர்களது அரசியல் கட்சியான விடு தலைப் புலிகளின் மக்கள் முன்னணி தடைசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன் னணி 1989 ஆம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது.

அயர்லாந்து கெரில்லா இயக்கம் பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட போதும் அவர்களது அரசியல் பிரிவு பிரிட் டனில் தொடர்ந்து இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ம)

### அச்சுவேலியில் உற்பத்தியாகும்

## கோழிக்குஞ்சுகளை 'லிப்கோ' மூலம் விநியோகிப்பதற்கு ஏற்பாடு

அச்சுவேலி,மார்ச்27

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் கோழிக் குஞ்சுகள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் (லிப்கோ) மூலம் விநி யோகிக்கப்படவுள்ளன.

கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட் டுறவுச் சங்க மூலம் கோழிக்குஞ்சு கள் விநியோகிக்கப்பட்டன.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற் பத்தி நிலையத்தில் இருந்து வாரத் திற்கு ஒரு தடவை வெளிவரும் கோழிக்குஞ்சுகள் யாழ்.மாவட்டத்தில் வட்டுக்கோட்டை, சங்கானை, வேலணை, தெல்லிப்பழை, கோப்பாய், சண்டி லிப்பாய், பருத்தித்துறை, யாழ்ப்பா ணம் ஆகிய இடங்களில் செயற் பட்டுவரும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலம் விநியோ கிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள் ளதாக அறியப்படுகின்றது.

வாரந்தோறும் தற்போது 1500 இற்கும் குறையாத அளவில் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வரு கின்றன என்றும் எதிர்காலத்தில் இந் தத் தொகை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேட்டுக் குஞ்சுகள் 40 ரூபா வீத மும் சேவல்குஞ்சுகள் 10 ரூபா வீத மும் விற்பனை செய்யப்படுகின்றன. (ம)

### கடத்தப்பட்ட முஸ்லிம்கள் விடுவிப்பு

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று கடத்திச்செல்லப்பட்ட 10 முஸ்லிம் விவசாயிகளும் விடுவிக் கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலீ ஸார் தெரிவித்தனர்.

அவர்கள் சென்ற உழவு இயந் திரங்கள் இரண்டும் புலிகளால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஞானசம்பந்தர் வீதி, வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை [J/166] எனனும் முகவரியைச் சேர்ந்த ஸ்கந்தராசா சயந்தன் என்பவரது தேசிய அ. அட்டை (781250139V), விசேட அ. அட்டை (090401955 பச்சை உறையுடன் மட்டும்) என்பன 24.03.2001 அன்று வட்டுக்கோட்டைக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியிலோ அல்லது செல்வராசா, சாமுவேல் அன் சன்ஸ் கொம்பனி, 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும். சன்மானம் ரூபா 4000 வழங்கப்படும். (85864)

இடைக்காடு, அச்சுவேலியைச் சேர்ந்த சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.396410192v) 23.03.2001 அன்று ஹற்றன் நஷனல் வங்கிக்கும் அச்சுவேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலையில் அல்லது மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (85884)

## சிறுகதை

க.பொ.த. மாணவர்களே! சிறுகதை படிக்கிறீர்களா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' நூலை வாசியுங்கள். சிறுகதை பற்றிய கட்டுரையுடன் 12 சிறுகதைகளுக்கு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாணம்' சிறுகதைத் தொகுதியையும் வாசியுங்கள்.

(85888)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கேட்டை நட்சத்திரம், 2ஆம் பாதம் (1974 திங்கள் முன்னிரவு 7.35க்குப் பிறந்த), 8 செவ்வாய், கிரக பாவம் 67, வங்கியாளருக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். மணமகன் B.sc., பொறியியலாளர், டாக்டர், வங்கியாளர், ஆசிரியர், கனடா, லண்டன், B.sc. ஆக இருக்கலாம். தொடர்பு: UNITED திருமண சேவை, க. ஜெயராணி, நவாலி வடக்கு, ச.ச.நிலையத்துக்கு அருகில். (c/15908)

## விற்பனைக்கு

8ஸ்ரீ - 10 மொறீஸ் ஒக்ஸ்போட் கார், 14 ஸ்ரீ 6303 நிசான் சனி வக்கன், புதிய, பழைய ஆட்டோக்கள், M.D 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசா, மாரியம்மன் மோட்டோஸ், நாவலடி, கோப்பாய். (85782)

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் மத்தியில் பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் கிளுவானை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் வெளிநாட்டுப் பாணியில் அமைக்கப்பெற்ற குளியலறை, நல்ல தண்ணீர் கொண்ட "லக்ஷ்மி வாசா" வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசா, மாரியம்மன், நாவலடி, கோப்பாய். (85783)

## தவறிவிட்டது

கயித்தான் அன்ரன் ஜெறோ என்பவருடைய தே.அ.அ. (இல. 621572458v) யாழ்ப்பாணத்துக்கும், இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல: 24, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (85869)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, கல்வித்தடை, தொழில்தடை நீங்குவதற்கு ஆலோசனை வழங்கப்படும். செவ்வாய், சனிக்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி நல்லூரிலும், ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (85812)

## சுட்டிபுரம் ஆலயத்தில் மீண்டும் பூஜை

கடந்த மே மாதம் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்கள் காரணமாக மூடப்பட்ட வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் நாளாந்த பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவமும் அபிஷேகத்துடன் இடம்பெற்றதாக ஆலய முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-117)

## Wanted Graduates to teach Biology

Please apply before the 13 th of April 2001 to the Principal, Jaffna College, Vaddukoddai.

**Principal,**
**Jaffna College,**
**Vaddukoddai.**

(C/15923)

## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மேலும் சிறப்படைகிறது



அதிபர்
**திரு.வே.ஞானகாந்தன்**
(B.A.Dip.Ed.Spc. Trd. S.L.P.S.)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 க்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டு உளமாரப் பாராட்டுவதுடன் மேலும் அவர் பல பதவி உயர்வுகள் பெற்று கல்விப்புலத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகனை வேண்டிநிற்கும் -

*24/3, சிவகுருநாதர் வீதி,*
*நீராவியடி.* (85907)

**திரு.S.நகுலேஸ்வரன்**
குடும்பம்.

## விக்னா

**கல்வி நிறுவனம்**

**O/L DAY CLASS**

பிரிவு 2 — அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

பிரிவு 3 — ஆரம்பம்: 30.03.2001

(85910)

## புதிய குறுங்கால பயிற்சி நெறிகள்

(2 மாதப் பயிற்சிகள்)

- கேக் ஐசிங்
- பூவேலை
- HairStyle
- சிற்றுண்டி ஆக்கல
- துணி வர்ணமிடல்

மேற்படி பயிற்சிகளில் ஏதாவது ஒன்றில் ஈடுபடுவோருக்கு கோலப் பயிற்சி இலவசம்.

**புதிய வகுப்புகள்**
**31-03-2001**

சனி 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.
✣ பயிற்சி முடிவில் கண்காட்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

**தூரிகை**
**நுண்கலை வளாகம்**

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

**வடமராட்சியில்**
M.M.V. றோட்,
நெல்லியடி.

(C/15911)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16
-
11
-
1904



மறைவு
26
-
02
-
2001

**திருமதி பொன்னம்மா முருகுப்பிள்ளை**

கடந்த 26.02.2001 இல் எமது அன்னையார் சிவபதமடைந்த செய்திகேட்டு, எமதில்லம் நாடி வந்து எமக்கு ஆறுதல்கூறி மற்றும் பல வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு நாளை (28.03.2001) புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்பு மகள்
**திருமதி திலகவதி வைரவநாதன்**

*சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி,*
*பருத்தித்துறை.* (85895)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
பெருமைக்குரிய வல்வை மைந்தர்களின் வரிசையில்
**செல்வி குணராஜ் சுதர்ஷினி**

21 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சாதாரணதர கல்விப் பொதுத் தராதரப்பத்திர பரீட்சையில் 10D களைப் பெற்ற செல்வி கு.சுதர்ஷினியையும் அவரை வழிநடத்திய ஆசிரியைகளையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மற்றும் இவருடன் சித்தியடைந்துள்ள மாணவிகளையும் வாழ்த்துகின்றோம்.

சீவரத்தினம் பேக்கரி
**சி.அமரசேனாபதி குடும்பத்தினரும்**
அதன் பணியாளர்களும்.

*வல்வெட்டித்துறை.* (85912)

## பழைய பித்தளை கொள்வனவு

சகல விதமான பழைய பித்தளைப் பொருள்களும் அதி உயர்ந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

**கொள்வனவு விலை கிலோவுக்கு ரூபா 65/-**

எவ்வளவு பித்தளையானாலும் கொள்வனவு செய்யப்படும்.

*விபரங்களுக்கு:-*

**செல்வா ஹாட்வெயர்ஸ்**

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2873 (C/15909)

உ
மூளாய்
## அருள்மிகு ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலய மகோற்சவ விஞ்ஞாபனம்

நாளை(28-03-2001)புதன்கிழமை கொடியேற்றம்

*தெய்வீகத்தொடர் சொற்பொழிவு*
**"கம்பராமாயணம்"**

நிகழ்த்துபவர்:-
கானக தாவாரிதி பிரம்மஸ்ரீ. சிவ. வை.நித்தியானந்தசர்மா
தினமும் மாலை 5.00மணிக்கு நடைபெறும்.

*மேற்படி ஆலய முகாமையாளர்.*

*பிரசுர அன்பளிப்பு:-* **கஜன் அழகுமாடம்**
உரிமையாளர்:- திரு.க.பாலசந்திரன, மூளாய் (85892)

உ
ஓம் சக்தி
சங்கரத்தை
## ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம்



**மகோற்சவ விஞ்ஞாபனம் 2001**

28-03-2001 புதன் நண்பகல் 12.00 மணி - கொடியேற்றம்
05-04-2001 வியாழன் மாலை 7.00 மணி - சப்பறம்
06-04-2001 வெள்ளி பி.ப. 1.00 மணி - தேர்
07-04-2001 சனி பி.ப. 1.00 மணி - தீர்த்தம்

*மகோற்சவ குரு:* **S.சுந்தரராசக்குருக்கள்**
(பிரதம குரு, வழக்கம்பரை அம்பாள் ஆலயம்)
மாலை 5.00 - 6.00 வரை தொடர் விரிவுரை
**"தேவி பாகவதம்"**
சொல்லின் செல்வர் **இரா.செல்வவடிவேல்** (ஆசிரியர்)
அவர்களால் நிகழ்த்தப்படும்.

அ.சந்திரசோதி
ஆலய அறங்காவலர்

*வாழ்த்துபவர் :-*
**மாதுளை பட்டுச்சோலை**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (85906)

# ஷார்ஜாவுக்கு இந்திய அணி செல்லாது

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாகிஸ்தான், இலங்கை அணிகள் பங்குபற்றும் ஷார்ஜா கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பங்குபற்றப் போவதில்லை என இந்தியா அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஒரு முறை ஷார்ஜாவில் பாகிஸ்தானை எதிர்தது விளையாட முடியாது என இந்தியா மறுத்திருந்தது. சமீபத்தில் பங்களாதேஷில் நடைபெற்ற ஹொக்கி போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தான் அணியை எதிர்த்து விளையாடியது குறிப்பிடத்தக்கது.

[ஒ]

# பாதாள உலகக் கும்பலுடன் அத்வானிக்குத் தொடர்பாம்!

## முன்னாள் தளபதி வெளியிட்ட தகவல்

புதுடில்லி, மார்ச் 7

இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானிக்கும் மும்பை பாதாளஉலக கும்பலின் தலைவன் தாவூத் இப்ராஹிமுக்கும் இடையே தொடர்பிருந்ததாக முன்னாள் இந்திய கடற்படைத் தளபதி விஷ்ணு பகத் தெரிவித்துள்ளார்.

அத்வானி இந்துத்துவ கொள்கைகளை முன்வைத்து சில வருடங்களின் முன்னர் நடத்திய ரதயாத்திரைக்கு தாவூத் இப்ராஹிம் தான் நிதி அளித்ததாகவும் பகத் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் இடதுசாரிக் கட்சியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய பாதுகாப்பு மற்றும் ஆயுத பேரம் குறித்த கருத்தரங்கில் பேசுகையில் இவற்றை பகத் வெளியிட்டார்.

இது தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியாகும் என்றும் பகத் மேலும் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பதவியேற்ற சில மாதங்களின் பின்னர் அப்போது கடற்படைத் தளபதியாகப் பதவி வகித்த விஷ்ணு பகத்; அந்தப் பதவியில் இருந்து விலக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ-6-9)

# பிரான்ஸில் விமான விபத்து: 20 பேர் பலி!

பாரிஸ், மார்ச் 27

பிரான்ஸின் கரீபியன் பகுதியில் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் 20 பேர் பலியாகினர்.

இந்த விமானம் வீடு ஒன்றில் மோதியதையடுத்தே விபத்து ஏற்பட்டது.

பிரான்ஸைச் சேர்ந்த 17 பயணிகளும், விமானிகள் இருவரும், வீட்டிலிருந்த ஒருவரும் விபத்தில் உயிரிழந்தனர்.

மோசமான காலநிலையே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

(ஒ)

# தமிழக அரசியலில்...

## தேர்தல் தொகுதி ஒதுக்கீட்டை தி. மு. க. கூட்டணி அறிவித்தது

சென்னை, மார்ச் 27

எதிர்வரும் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தி. மு. க. கூட்டணியின் தொகுதி ஒதுக்கீடுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் தி. மு. க. 155 இடங்களில் போட்டியிடும்

ம. தி. மு. கவுக்கும், பாரதீய ஜனதாவுக்கும் தலா 21 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்களிடையே செல்வாக்குப் பெற்ற புதிய தமிழகம், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவற்றுக்கு முறையே 10, 8 இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்கள் தமிழ் தேசியக் கட்சிக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ் மாநில காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றவர்கள் தொடக்கிய இரு அமைப்புக்களான தமிழக ஐக்கிய இஸ்லாமிய பேரவை மற்றும் த. மா. கா. ஜனநாயகப் பேரவை ஆகியவற்றுக்குத் தலா 3 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

எம். ஜி. ஆர். கழகத்துக்கு 2 இடங்களும், ஜாதிக் கட்சிகளான தமிழக முத்தரையர் சங்கம், விவசாயிகள் கட்சி, கொங்கு நாடு மக்கள் கட்சி, தொண்டர் காங்கிரஸ், பாவார்ட் புளொக் ஆகியவற்றுக்குத் தலா 1 இடமும் வழங்கப்பட்டுள்ளன.

(ஒ)

## தி.மு.க.கூட்டணிக்கான ஆதரவை 3 வன்னிய அமைப்புகள் வாபஸ்

சென்னை, மார்ச் 27

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் தி. மு. க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று அந்தக் கூட்டணியில் உள்ள வன்னிய சமூகக் கட்சிகள் அறிவித்துள்ளன.

முன்னாள் மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான தமிழக ராஜீவ் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் தலைவரான பேராசிரியர் தீரனின் பாட்டாளி மக்கள் பேரவை, வன்னிய அடிகளாரின் வன்னிய சங்கம் ஆகிய கட்சிகளே தி. மு. க. கூட்டணிக்கு ஆதரவளிப்பதில்லையெனத் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் தேர்தலில், இந்த 3 அமைப்புகளுக்கும் தலா ஒரு இடத்தை தி.மு.க. வழங்க முன்வந்திருந்தது.

இதனை ஒப்புக்கொள்ள மறுத்த அந்தக் கட்சிகள், தி. மு. க. கூட்டணிக்கு ஆதரவு வழங்குவதில்லை என முடிவெடுத்துள்ளன.

அ. தி. மு. க. கூட்டணியில் உள்ள டாக்டர் ராமதாஸின் பா. ம. கவை சமாளிக்க, வன்னிய மக்களிடம் ஓரளவு செல்வாக்குப் பெற்ற இந்த 3 அமைப்புகளும் தி. மு. கவுக்கு உதவும் என்று முன்னர் கருதப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# எல்லைக் கடத்தல் பேர் வழி கனடியப் பொலீஸாரால் கைது!

டொறன்டோ, மார்ச் 27

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை எல்லை கடத்தும் ஒரு கும்பலின் தலைவரை கனடியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

யுவான் சுவாங்லிங் என்ற அந்த நபர் நேற்று முன்தினம் டொரன்டோவில் கைது செய்யப்பட்டார்.

சீனர்களையும், தென் கொரியர்களையும் கனடாவின் ஊடாக அமெரிக்காவுக்கு கடத்தும் நடவடிக்கைகளில் லிங்கின் கும்பல் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

டொரன்டோவில் கனடிய உல்லாசப்பயண 'விசா'க்களை பெற்றுக் கொண்ட பின்னர் ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 400 பேர் அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கனடியப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்தே லிங் கைதானார்.

சட்டவிரோத குடியேற்றக்காரர்களை எல்லை கடத்தும் சம்பவங்களில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சில கொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் குறித்து கனடிய பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருவதாகக்கூறப்படுகிறது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, மார்ச் 27

நேற்று முன்தினம் பிற்பகல் 3. 30 மணிக்கு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இருவர் உயிரிழந்தனர் 160 பேர்வரை காயமடைந்துள்ளார்.

6.6ரிச்டேர் அளவுகொண்ட இந்த நிலநடுக்கத்தால் பீதியடைந்த மக்கள் நேற்று முன்தினம் இரவு முதல் வெட்டவெளிகளில் தங்கியுள்ளனர். இதற்கிடையில், இப்பகுதியில் கடும் மழைபெய்யத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## பா. ஜ. க. தலைவராக ஜனா தெரிவானார்

புதுடில்லி, மார்ச் 27

தமிழகத்தைச் சேர்ந்த ஜனா கிருஷ்ணமூர்த்தி பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆயுத பேர ஊழல் குற்றச்சாட்டுகளையடுத்து பங்காரு லஷ்மன் பதவி விலகியதால் இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## இந்தியாவுக்கு புதிய தூதர்

புதுடில்லி, மார்ச் 27

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதராக ரொபேர்ட்டி பிளக்போல் என்பவரை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நியமித்துள்ளார்.

இவர் அமெரிக்க பல்கலைக் கழகத்தில் சர்வதேச பாதுகாப்புத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ட-6)

## பிரச்சினையை உருவாக்கும் நாடுகள்

பாகிஸ்தான், ஈரான், ஈராக், வடகொரியா ஆகியவற்றை பிரச்சினைகளை உருவாக்கும் நாடுகள் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் தெரிவித்துள்ளதாக, 'வாஷிங்ரன் போஸ்ட்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இந்த நாடுகளுக்கு எதிராக ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏவுகணைப் பாதுகாப்புத் தேவை என்றும் புடின் கூறியுள்ளார்.

## கால்நடைச் சந்தைகள் மூடப்பட்டன

தென்கொரியாவில் உள்ள 142 கால்நடைச் சந்தைகளைத் தற்காலிகமாக மூடத் தென்கொரிய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஐரோப்பாவிலும் மற்றும் பல பகுதிகளிலும் வேகமாகப் பரவி வரும் கால்நடைத் தொற்றுநோயால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# 'கிளாடியேட்டர்' திரைப்படம் 5 ஒஸ்கார் விருதுகளைவென்றது

திரைப்படங்களுக்கு வழங்கப்படும் விருதுகளில் பெருமை மிக்கதாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுகள் நேற்று முன்தினம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 73 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழாவில் 'கிளாடியேட்டர்' என்ற ரொமானிய நாட்டு இதிகாசத் திரைப்படம் 5 விருதுகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளது.

அதைத்தொடர்ந்து 'கிளொசிக்டைகர்', கிடின்டிராகன் ஆகிய தைவானிய திரைப் படங்கள் 4 விருதுகளைப் பெற்றுள்ளன.

போதைப் பொருள் கடத்தலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'கிராபிக்' 3 விருதுகளைப் பெற்றுள்ளது.

கிளாடியேட்டர், திரைப்படத்தில் நடித்த ருசல்குரோ சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றார். 'கிராபிக்' திரைப்படத்தை இயக்கிய சிபில் சோரன்பெர்க் சிறந்த இயக்குநர் விருதையும் —

'எரின் புரோகோவிச்' திரைப் படத்தில் நடித்த யூலியா ரொபேர்ட்ஸ் சிறந்த நடிகை விருதையும் பெற்றுள்ளனர்.

(ஒ)

# ஆப்கானிஸ்தானில் தலிபானுடன் எதிர்ப்பாளர்கள் கடும் மோதல்

காபூல், மார்ச். 27

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் படைகளுக்கும் எதிர்த்தரப்பினரான எஸ். பி. வாதாத் குழுவினருக்கும் இடையே கடந்த 10 நாள்களாக கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள பாலியா நகரை நெருங்கி தாக்குதல் நடத்தி வருவதாக எஸ். பி. வாதாத் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் ஷியா மற்றும் ஹசாரா இஸ்லாமிய பிரிவுகளைச் சேர்ந்த தலிபான் எதிர்ப்புக் குழுவினர் பாலியா நகரைக் கைப்பற்றினர்.

ஆனால் தலிபான்களின் எதிர்த்தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், 4 நாள்களின் பின்னர் பாலியா நகரை விட்டு எதிர்ப்புக்குழுவினர் பின் வாங்கியிருந்தனர்.

தற்போது பாலியா நகருக்குச் சுற்றுப் புறத்தில், தலிபான் பாதுகாப்பு நிலைகள் உள்ள இடங்களில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் எஸ். பி. வாதாத் குழுவினர் நிலை கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது (ஒ-6-9)

# இந்தோனேசிய சிறையில் கைதிகள் கலவரம்; ஒருவர் பலி!

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாப் பகுதியில் சிரிபான் என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் கைதி ஒருவர் கொல்லப்பட்டார். 10 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜகார்த்தாவைச் சேர்ந்த சிட்டினன் சிறைச்சாலையில் இருந்து 25 கைதிகள் மாற்றம் செய்யப் பட்டதையடுத்தே கலவரம் மூண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் சிறைச்சாலையில் குறிப்பிட்ட ஒரு குழுவினருக்குச் சாதகமாகச் சிறை அதிகாரிகள் நடந்துகொண்டதாகவும்—

இதனை எதிர்த்து மற்றைய கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

(ஒ-6-9)

# தீவிரவாதிகள் பிடித்த பகுதியை மஸிடோனியப் படைகள் மீட்டன

மஸிடோனியப் படையினருக்கும் அல்பேனியத் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் கடும் மோதல்களில் அல்பேனியத் தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்றியுள்ளதாக மஸிடோனிய அரசு அறிவித்துள்ளது

மஸிடோனியாவின் வட பகுதி மலைப்பிரதேசத்தில் நடந்து வரும் மோதல்களில் நேற்று முன்தினம் 3 பொலீஸாரும், 4 பொதுமக்களும் உயிரிழந்ததாக மஸிடோனிய படைகள் கூறியுள்ளன.

யூகோஸ்லாவியாவின் எல்லைப்புறப் பகுதியான கொசோவாவில் பிரிவினை கோரிவரும் அல்பேனியத் தீவிரவாதிகள். பக்கத்து நாடாகிய மஸிடோனியாவில் அல்பேனியர்கள் அதிகம் வாழும் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் முயற்சியில்மஸிடோனிய படைகளுடன்மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

# வடமேல் மாகாணத்துக்கு மேலும் 145 தமிழ் ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு, மார்ச் 27

வடமேல் மாகாண சபையால் 145 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருப்பதாக வடமேல் மாகாண முதல்வர் எஸ். பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

இதில் வடமேல் மாகாண சபைக்கு உட்பட்ட புத்தளம் மாவட்டத்திற்கு 105 ஆசிரியர்களும் குருநாகல் மாவட்டத்திற்கு 40 ஆசிரியர்களும் நியமிக்கப்பட உள்ளனர். இந்த ஆசிரிய நியமனங்கள் இம்மாதம் 25 ஆம் திகதியும், 27 ஆம் திகதியும் குருநாகல் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட உள்ளன. (ஐ)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 27

வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய இளைஞர் மன்றங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ அளவெட்டி தெற்கு, அளவை இளைஞர் கழகம் எதிர் இளவாலை வசந்தபுரம் இளஞ்சுடர் இளைஞர்கழகம்.

★ அளவெட்டி கிழக்கு, தென்றல் இளைஞர் கழகம் எதிர் பன்னாலை கணேசன் இளைஞர் கழகம். (உ-86)

★ ★ ★

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடையே நடத்தப்படும் ஹொக்கி சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ளன. (உ-86)

★ ★ ★

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத்திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலக பிரிவும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவும் மோதுகின்றன. (உ-86)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

விடுதிகள் திருத்தம்

## கூறுவிலை கோரல்

பின்வரும் திருத்த வேலைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன:

1. இராஜரத்தினம் மண்டபம் — தளம்
2. சுவர்ப் பேழைகள் அமைத்தல்
3. ஆண்கள் விடுதி—கிணற்றடி திருத்தல்
4. பெண்கள் விடுதி—கிழக்கு மதில் திருத்தல்
5. ஆண்கள் விடுதி—கிழக்கு மதில் திருத்தல்
6. மாட்டுக்கொட்டில் அமைத்தல்

★ விவரங்கள் சங்க அலுவலகத்தில்

★ கூறுவிலைகள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி: 05-04-2001

சோ. பத்மநாதன்
செயலாளர்

சை வி வி. சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி/15926)



## கண்ணீர் அஞ்சலி

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவனும், பாடசாலை அபிவிருத்திச்சங்க நீண்டகால முன்னாள் உறுப்பினருமாகிய

### அமரர் க. குமாரசுவாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

(35920)



## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின்
முன்னாள் தலைவரும் போஷகரும்,
எமது ஆலயத்தின் முன்னாள் பொருளாளரும்
யாழ். இந்துக் கல்லூரியில்
துணை ஆளணியினராகக் கடமையாற்றியவருமான

### அமரர் கதிரன் இலகுநாதன்

அவர்களின் மறைவையிட்டு
எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகாத்மாஜி சனசமூக நிலைய
அனைத்து மக்களும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(85922)


# அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப. 2 30 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (3-117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவம் இடம்பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும், 7 ஆம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் 8 ஆம் வேள்வி விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறவுள்ளன. (க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

இளவாலை, ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது (க-10)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த சிவன் உற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கைலாயவாகனமும் 4 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 5 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன. (ம)

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழன் தேர்த் திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று மறுநாள் பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவுறும்.

தினமும் மாலை 5 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா ''கம்பராமாயணம்'' பற்றி சொற்பொழிவாற்றுவார். (க)

★ ★ ★

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த சங்காபிஷேகத்தை முன்னிட்டு ஆலய மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ''முருகனிடத்தில் தீவிரபக்தி வைக்கத்தடைகள் யாது? — சுயநலம் என்ற பேய்'' என்னும் தலைப்பில் ஆத்மீக உரையாற்றவுள்ளார். (க-9)

★ ★ ★

மானிப்பாய் சோதி வேம்படி காளி அம்மன் தேவஸ்தான ஏழாம் வருட வசந்த நவராத்திரி விழா கடந்த ஞாயிறு ஆரம்பமாகி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் நவராத்திரி பூஜையும், பஜனையும் இடம்பெற்று 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காளி அம்பாளின் நகர் உலா நடைபெறும். (க-9-90)

# சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வங்கி ஊழியரின் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புப் பரிசுத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஜி.சி.ஈ. உயர்தரம், சாதாரண தரம் மற்றும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் அதி சிறந்த பெறுபேறுகளையும் பாடசாலை தொடர்பான வேறு துறைகளில் சிறப்புப் பரிசுகளையும் பெறும் வங்கி ஊழியர்கள் மற்றும் வங்கி ஒய்வூதியர்களின் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

வடமாகாண வங்கி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம், இந்த ஊக்குவிப்புப் பரிசுகளைப் வழங்க உள்ளது.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சி ஈ. உயர்தரம் சாதாரணதரம், ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகிய பரீட்சைகளில், அதி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின்பெயர் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது (ம)

# மாணவியின் தங்க வளையல் அபகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27

பாலர் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய மாணவியின் கையில் இருந்த சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க வளையல்கள் அபகரிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் உடுப்பிட்டி உடையார் ஒழுங்கையில் இடம்பெற்றது.

வீட்டுக்கு அருகிலுள்ள ஒழுங்கையில் வைத்து இளைஞர்கள் இருவர் மாணவியை தங்களுக்கு அருகில் அழைத்து வளையல்களை கழற்றிக் கொண்டு ஓட்டம் பிடித்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-31)

# கலந்துரையாடல்

நெல்லியடி, மார்ச் 27

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள குடத்தனை கிராம சேவை அலுவலர் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை சமுர்த்திச் செயலணிக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி, தலைமை முகாமையாளர் ப.பாலகரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி பி. வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தப் பகுதியில் உள்ள— 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய — இளைஞர், யுவதிகளை இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-109)

# கல்வியங்காட்டில் கைதானோர் காங்கேசனில்'

கல்வியங்காட்டுப் பகுதியில் கடந்த 17 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் தற்பொழுது காங்கேசன்துறைப் பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வேலாயுதம் சிவராஜா (வயது 26), இவரது சகோதரரான வேலாயுதம் ஜெயராஜா (வயது 21), சின்னத்துரை சுபாகரன் (வயது 25) ஆகியோரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இதேவேளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்குள்ள கைதிகளைப் பார்வையிடும் அவர் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களை அவர்களிடம் கையளிக்கவுள்ளார். (உ-5)

# இளைஞனை காணவில்லை

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்தில் உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி கெற்பெலியைச் சேர்ந்த விக்கினேஸ்வரமூர்த்தி குகருபன் (வயது 26) என்பவரே காணாமல் போனவராவார்.

கடந்த 6 ஆம் திகதி கெற்பெலியிலுள்ள தமது வீட்டை பார்வையிடச் சென்ற இவர் பின்னர் பருத்தித்துறைக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அன்று காலை 10 மணியளவில் வரணி முள்ளி சோதனைச் சாவடியில் இவரைக் கண்டதாகச் சிலர் தெரிவித்ததாகவும் உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (உ-5)


## வாழ்த்துகின்றோம்

யா / இடைக்காடு மகா வித்தியாலயத்தில்

G. C. E, சாதாரண தரப் பரீட்சையில்

சித்தியடைந்த மாணவ, மாணவிகளையும் கற்பித்த, வழி நடத்திய அதிபர், ஆசிரிய ஆசிரியைகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| K வசிகரன் | — | 6C, 2S |
| S வைகுந்தவாசன் | — | 2D, 6C |
| M. சுயந்தன் | — | 3C, 4S |
| N. சுமீலா | — | 5D, 4C |
| G. சங்கீதா | — | 2D, 4C, 3S |
| T. லயனி | — | D, 3C, 2S |
| L. பகீரா | — | 3D, 6C |
| K. சோபா | — | D, 2C, 4S |
| P. சிவச்செல்வி | — | D, 4C, 4S |

விளம்பர அன்பளிப்பு;

சிறி தொலைத் தொடர்பு
தம்பாலை.
தொலைபேசி இல: 070-212893

(85918)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 26ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(131751ஏ) (166585ஏ) (179330ஏ)
(179330பி) (179330சி) (183247ஏ)
(184935ஏ) (185072ஏ) (185272ஏ)
(185272பி) (185306ஏ) (185306பி)
(185872ஏ) (185872பி) (186729ஏ)
(186729பி) (186778ஏ) (186778பி)
(186822ஏ) (186822பி) (186846ஏ)
(186846பி) (186846சி) (186846டி)
(187004ஏ) (187051ஏ) (187133ஏ)
(187136ஏ) (187201ஏ) (187201பி)
(187204ஏ)

### யாழ்ப்பாணம்

(171367ஏ) (172207ஏ)

### கரவெட்டி

(171354ஏ)

### கோப்பாய்

(171318ஏ) (177233ஏ) (177233பி)
(177330ஏ) (177331ஏ) (180794ஏ)
(180856ஏ) (180895ஏ) (180909ஏ)
(180936ஏ) (180936பி) (180957ஏ)
(180957பி) (180987ஏ) (181001ஏ)
(181034ஏ) (181038ஏ) (181038பி)
(181038சி) (182893ஏ) (182893பி)
(182928ஏ) (182928பி) (182940ஏ)
(182940பி) (182943ஏ) (182943பி)
(183000ஏ) (183000பி) (183021ஏ)
(183021பி) (183021சி) (184209ஏ)
(186331ஏ) (186337ஏ) (186356ஏ)
(186362ஏ) (186395ஏ) (186433ஏ)
(186542ஏ) (186542பி) (186543ஏ)
(186543பி) (186544ஏ) (186544பி)
(186544சி) (186574ஏ) (186582ஏ)
(186600ஏ) (186604ஏ) (186604பி)
(186640ஏ) (186640பி)

### நல்லூர்

(156916ஏ) (171001ஏ) (171011ஏ)
(171033ஏ) (171497ஏ) (177165ஏ)
(179600ஏ) (179600பி) (179725ஏ)
(179735ஏ) (179735பி) (179775ஏ)
(179783ஏ) (179795ஏ) (179795பி)
(184128ஏ) (184128பி) (184153ஏ)
(184153பி) (184166ஏ) (184166பி)
(184199ஏ) (184199பி) (184199சி)
(184247ஏ) (184248ஏ) (184316ஏ)
(184317ஏ) (172207பி) (172207சி)
(172207டி) (172207ஈ) (172207எவ்)
(172207ஜி) (174835ஏ) (179306ஏ)
(179306பி) (179307ஏ) (181600ஏ)
(181600பி) (183279ஏ) (183279பி)
(185286ஏ) (185286பி) (186749ஏ)
(186749பி) (186961ஏ) (186961பி)
(187038ஏ) (187038பி) (187048ஏ)
(187049ஏ) (187074ஏ) (187092ஏ)
(187115ஏ) (187175ஏ)

### சண்டிலிப்பாய்

(171496ஏ) (158528ஏ) (158528பி)
(158528சி) (158528டி) (182602ஏ)
(183187ஏ) (183187பி) (183411பி)
(183441ஏ) (183441சி) (185136ஏ)
(185197ஏ) (185197பி) (185197சி)
(185197டி) (185240ஏ) (185281ஏ)
(185281பி) (185746ஏ) (185758ஏ)
(185786ஏ) (185828ஏ) (185845ஏ)
(185925ஏ) (187030ஏ) (187030பி)
(187030சி) (187073ஏ) (187078ஏ)
(187163ஏ) (187163பி) (187164ஏ)
(187164பி) (187165ஏ) (187168ஏ)
(187169ஏ) (187189ஏ) (187189பி)
(187190ஏ) (187190பி) (187190சி)

### தெல்லிப்பழை

(183048ஏ) (183048பி) (183048சி)
(183048டி) (183048ஈ) (183048எவ்)
(183408ஏ) (185049ஏ) (187084ஏ)
(187084பி) (187084சி) (188724ஏ)

### உடுவில்

(179803ஏ) (179803பி) (179807ஏ)
(179807பி) (184131ஏ) (184131பி)
(184131சி) (184236ஏ) (184236பி)
(184236சி) (184256ஏ) (184256பி)
(176686ஏ) (176686பி) (180319ஏ)
(181590ஏ) (181590பி) (182821ஏ)
(185169ஏ) (185169பி) (185296ஏ)
(186740ஏ) (186740பி) (186757ஏ)
(186757பி) (186757சி) (186757டி)
(186759ஏ) (186780ஏ) (186780பி)
(186780சி) (186839ஏ) (186861ஏ)
(187058ஏ) (187139ஏ)

(ம-10)


## பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயம்

### மஹோற்சவம் இன்று ஆரம்பம்

சைவமும் தமிழும் இணைந்த யாழ். திருநாட்டில் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று (27.03.2001) செவ்வாய்க்கிழமை எம்பெருமானின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

உற்சவ காலத்தில் சைவர்களாகிய நாம் நாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலவப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். எம்பெருமான் அனைவருக்கும் அருள்பாலிப்பாராக!

ந.திரிலோகநாதன்

(வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், இந்து ஆலயங்களின் மகா சபையின் போஷகரும், ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டை அமைப்பாளரும்.)

(C/15931)

## திருமறைக் கலாமன்றம் எடுக்கும்

## உலக நாடக தினம்

### சிறப்புக் கருத்தரங்கு

*யாழ். திருமறைக் கலாமன்றம் உலக நாடக தினத்தை முக்கியத்துவப்படுத்தும் முகமாக இரண்டாவது வருடமாக இவ்வருடம் (இன்று) சிறப்புக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.*

- "சமகால ஐரோப்பிய நாடகப் போக்குகள்" — பேரா.அருட்.திரு.நி.மரியசேவியர் அடிகள்
- "ஈழத்தின் சமகால தமிழ் அரங்கின் போக்குகள்" — திரு.யோ.ஜோண்சன் ராஜ்குமார்
- "சமகால அரங்க உருவாக்கத்தில் பட்டறைகளின் பங்கு" — திரு.ம.சாம் பிரதீபன்
- "அனுபவ பகிர்தல்கள்"

காலம் :- இன்று (27.03.2001) செவ்வாய்க்கிழமை
நேரம் :- பி.ப.3.30 மணி
இடம் :- மன்ற "கலைத்தூது மண்டபம்"

நாடக அரங்க ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (C/15930)

பொதுச் செயலாளர், திருமறைக்கலாமன்றம்.

## சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்

### வருடாந்த மகோற்சவம் - 2001

27.03.2001 - காலை 10.00 மணி - கொடியேற்றம்
01.04.2001 - மாலை 4.00 மணி - வசந்தோற்சவம்
03.04.2001 - மாலை 3.00 மணி - வேட்டை
04.04.2001 - மாலை 6.00 மணி - சப்பறம்
05.04.2001 - காலை 10.00 மணி - தேர் உற்சவம்
06.04.2001 - காலை 9.00 மணி - தீர்த்தம்
08.04.2001 - காலை 10.00 மணி - பொங்கல்

பரிபாலன சபை, ஐயனார் தேவஸ்தானம்.

*சுன்னாகம்.* (85927)


## மரண விசாரணைக்கு நிரந்தர அலுவலகம்

நெல்லியடி,மார்ச்27

திடீர் மரணம் சம்பந்தமாக மரண விசாரணைகளை மேற்கொள்வதற்காக மந்திகை மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் நிரந்தர அலுவலகம் ஒன்று இயங்கவுள்ளது.

மந்திகை மருத்துவமனையில் மரணவிசாரணைகளை நடத்துவதற்கு தகுந்த இடம் இல்லாதிருப்பது குறித்து வடமராட்சிப்பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேல்பிள்ளையிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதனைத் தொடர்ந்தே மரணவிசாரணை அதிகாரிக்கென, பிரத்தியேகமாக அலுவலகம் ஒன்று ஒதுக்கப்படவுள்ளது. (க-109)

## புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு - இறுப்பிட்டி வரை பஸ் சேவை ஒன்று இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 7.45 மணிக்குப் புறப்படும் பஸ் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் திரும்பும்.

அரச ஊழியர்கள் மற்றும் இறுப்பிட்டிப் பகுதி மக்களின் கோரிக்கையின் பேரில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது என்றும் -

போதிய பயணிகள் இந்தப் பஸ் சேவையைப் பயன்படுத்தாத பட்சத்தில் சேவை நிறுத்தப்படும் என்றும் -

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி.எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். (உ-3)


## இணைந்த கணிதம்

(பிரத்தியேக வகுப்பு)

2003 A/L 30.03.2001 வெள்ளியன்று ஆரம்பமாக உள்ளது.

திரிகோண கணிதம்
(வெள்ளி 4 p.m.)

நேர்கோட்டு இயக்கம்
(வெள்ளி 5 p.m.)

2002 A/L
வகையீட்டின் பிரயோகம்
2001 A/L
வட்டம்

என்பனவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆசிரியர்:-
N.A.சயனன் (B.Sc.)
வளாக வீதி,
திருநெல்வேலி. (85926)


# மானிப்பாயில் உணவகங்களில் சோதனை

சண்டிலிப்பாய்,மார்ச்27

மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளிலுள்ள உணவகங்கள், தேநீர்க் கடைகள் ஆகியவற்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் போது சுகாதார சீர்கேடுகள் பல கண்டு பிடிக்கப்பட்டன. இச் சுகாதார சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அவற்றை உடனடியாகச் சீர்செய்யுமாறு பணிப்புரை விடுத்தனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பகுதி உணவகங்களிலும், தேநீர்க் கடைகளிலும் இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.வருணநாதன், ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தயாமோகன் ஆகியோரால் இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை -

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சுற்றாடலில் புதிதாக உற்சவ காலத்தில் உணவகங்கள், தேநீர்க் கடைகள் ஆகியனவற்றை நடத்த விரும்புபவர்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் அப்பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# கொழும்பில் நாளை மறியல்

கொழும்பு,மார்ச்27

விடுதலைப் புலிகள் வசம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பதினொரு பொதுமக்களையும், பன்னிரண்டு படையினரையும் விடுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கோரி நாளை புதன்கிழமை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முனபாகச் 'சமாதானத்துக்கான பெற்றோர்கள்' என்ற அமைப்பு மறியல் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளது.

இந்தத் தகவலை அந்த அமைப்பின் தலைவர் கப்டன் ஜனக தேனுவர தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் வசம் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்கும்படி அரசு உரிய முறையில் விண்ணப்பித்தால் எதிர்வரும் புது வருடப் பிறப்புக்கு முன்னதாகவே அவர்களை விடுவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

கப்டன் ஜனக தேனுவர விடுதலைப் புலிகள் வசம் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## திறந்து வைப்பு

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தின் தேர்முட்டி பலலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதனை வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் நேற்றுத் திறந்து வைத்தார்.


## வைத்தியர் தேவை

**M.B.B.S. அல்லது R.M.P. (R.M.O.) பகல் நேர சேவைக்குத் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**E.N.T. அன் மெடிக்கல் கிளினிக்கில் சத்திர சிகிச்சை செய்ய தெரிவுசெய்யப்பட்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.**

**குறிப்பு: மயக்க மருந்து, ஒட்சிசன் வந்து விட்டன.**

யாழ். வைத்தியசாலை,
284, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P.3533

(85930)


## மரண அறிவித்தல்கள்

### குரும்பசிட்டி பொ.சிவசுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் தற்பொழுது தெகிவளையில் வசித்து வந்தவருமாகிய இளைப்பாறிய உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஷ்ட மதிப்பீட்டு உத்தியோகத்தர் பொ.சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (26.03.2001) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவாஜி (சுவிஸ்), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கிருபாகரனின் (நோர்வே) அன்பு மாமனாரும், பிரதீபா, பிரவீன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தயாபரன்.

குரும்பசிட்டி. (85931)

### திருமதி
### சின்னையா பொன்னம்மா (பொன்னு)

சாவகச்சேரி வடக்கு, சோலை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா பொன்னம்மா நேற்று (26-03-2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சிவசம்பு (முன்னாள் பட்டினசபை உறுப்பினர், சாவகச்சேரி), சுப்பிரமணியம்(கனடா - முன்னாள் C.T.B. உத்தியோகத்தர்), மகேஸ்வரி (தும்பளை), அன்னலட்சுமி(கொழும்பு)(சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை தாதி) ஆகியோரின் தாயாரும், லட்சுமி, இராசாத்தி (கனடா), தம்பியையா, செல்வரட்ணம்(கால்நடை தொழில்நுட்பவியலாளர்) ஆகியோரின் மாமியாரும், செல்வராசா, குணராசா (குணா), சிவராசா (சிவா), இராசேஸ்வரி, குணேஸ்வரி, கோமளேஸ்வரி, சர்வேஸ்வரி, மகேஸ்வரி, சுபாஸ்கரன் (நோர்வே), சுதாகரன், சுரேஸ்குமார்(கனடா), லோசினி (கனடா), விஜயரஞ்சன் (கனடா), சிவரஞ்சன்(கனடா), ஜெயரஞ்சன் (கனடா), ரஞ்சன் (கனடா), ரஞ்சினி, கிருஸ்ணமூர்த்தி (லண்டன்), கிருஸ்ணானந்தி (ஜேர்மனி), முரளிகிருஸ்ணா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும், கவிதா, அனுரா, சாந்தி, சுமன், லதன், யஜிந்தன், சுபித்தா, வினோதா, பவிதா, சகிலன், சங்கவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-03-2001) செவ்வாய்க்கிழமை அவரது தற்காலிக வசிப்பிடமாகிய ஊரெழு கிழக்கில் இடம்பெற்று பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தற்காலிக முகவரி:
*உடையார் ஒழுங்கை,*
*ஊரெழு கிழக்கு.*

நிரந்தர முகவரி:
*மடத்தடி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
சி.குணராசா(குணா)
(பேரன்)

(85925)

# திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.கல்வி வலய மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தரம் 3**

✪ சி.பிரகாஷ் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்.

✪ சி.தபிரா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்.

✪ நிகா சண்முகநாதன் - புனித ஜோண் பொஸ்கோ வித்.

**தரம் 4**

✪ ஜெ.அபிரா - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

✪ தை.சுலோசினி - அச்சுவேலி ம.வி.

✪ ந.தார்மீகன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**தரம் 5**

✪ செ.மாதங்கி - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

✪ சி.கௌசல்யன் - புனித ஜோண பொஸ்கோ வித்.

✪ வி.பிரவீணா - கோப்பாய் ம.வி.

**தரம் 6**

✪ க.சத்தியநாயகி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

✪ பா.விதுசாயினி - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

✪ கெ.கிரேஸ் சுஜசிந்கென்ஸ்மன் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**தரம் 7**

✪ ச.பைரவி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

✪ கு.லக்ஷாயினி - கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.

✪ இ.கோபிகா - வாதரவத்தை விக்னேஸ்வரா

**தரம் 8**

✪ இ.சுபா - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

✪ அ.திவ்வியா - நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

✪ இ.தர்சிகா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி

**தரம் 9**

✪ ச.மகிழினி - வேம்படி மகளிர் கல்லூரி

✪ இ.சசிதா - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி

✪ யோ.பிரவீந்திரா - புனித பத்திரிசியார் கல்லூரி

**தரம் 10-11**

✪ பே.சாளினி - வேம்படி மகளிர் கல்லூரி

✪ இ.மஞ்சுளா - கொக்குவில் இராமகிருஸ்ணா வித்.

✪ இ.கஜானா - உரும்பிராய் சைவத்தமிழ் வித்.

**தரம் 12-13**

✪ றெ.செறில்ஸஸ் - புனித பத்திரிசியார் கல்லூரி

✪ த.எந்துஜா - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி (இரண்டாமிடம்)

✪ யோ. சுபாஜினி - செங்குந்த இந்துக் கல்லூரி ( மூன்றாம் இடம்)

இவர்களுக்கான சான்றிதழ்கள் யாவும் அவரவர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-10-9)

## கூட்டுறவாளர் கலந்துரையாடல்

தென்மராட்சி,மார்ச்27

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியில் உள்ள சங்க அலுவலகத்தில் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள், சங்க இயக்குநர் சபை அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதால் அனைத்து பணியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (3-117)

## காணி கொள்வனவுக்கு பொது மக்களிடம் நிதி சேகரிப்பு

தென்மராட்சி,மார்ச்27

பருத்தித்துறை பிரதேச செயலக கட்டடம் அமைப்பதற்கு பொது மக்களின் நிதி உதவிப் பங்களிப்புடன் காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கென பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர்களும், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் பொதுமக்களிடம் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர், வன்னியிலிருந்து சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பி நிவாரணம் பெறுவோர் ஆகிய குடும்பங்களிடமிருந்து தலா 150 ரூபா வீதம் பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,மார்ச்27

கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள சத்துணவுத் திட்டத்தின் ஆரம்ப விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் தீவக வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், புங்குடுதீவுப் பகுதி கிராம சேவையாளர் கு.சந்தியா, புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் செல்வி. செ.ஏ.செல்வவதனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (உ-3-10)

## முகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மரணம் சம்பவித்தது என்று சட்ட வைத்திய அதிகாரி தமது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலீஸார் மன்னார் தாராபுரம் கடற்படைமுகாம் பொறுப்பதிகாரியான டி.ஆர்.எஸ்.ஹரச்சந்திரா மற்றும் கே.ஏ.எஸ்.பிரசாத்குமார் ஆகியோரைக் கைது செய்து நேற்று நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

இவர்களைப் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரினர்.

அந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிவான், அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-3-9)

# போலி ஆவணங்களுடன் மாடு கடத்த முயன்றோர் கைது!

தென்மராட்சி,மார்ச்27

போலி ஆவணங்களைக் காட்டி மூன்று மாடுகளைக் கொடிகாமம் பகுதியில் இருந்து கடத்தி வந்த லாண்ட் மாஸ்ரர் சாரதி உட்பட இருவரை இராணுவப் பொலீஸார் கைது செய்து நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இளைப்பாறிய கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழைக் காட்டியபோது இவர்கள் இராணுவப் பொலீஸாரிடம் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இருவர் மீதும் நெல்லியடிப் பொலீஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-117)

# பண்டத்தரிப்பில் பொலீஸ் பிரிவு திறப்பு

சண்டிலிப்பாய், மார்ச்27

பண்டத்தரிப்புச் சந்திக்கு அண்மையிலுள்ள கட்டடத்தில் புதிய பொலஸ் பிரிவு ஒன்று கடந்த 22ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பிரதி பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்னாவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பொலீஸ் பிரிவை இளவாலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.கே.ஹேமந்த திறந்து வைத்தார்.

இப்பகுதியிலும் இதன் அயல் கிராமங்களிலுமுள்ள பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை இப்பொலீஸ் பிரிவில் ஞாயிறு, செவ்வாய், புதன் ஆகிய மூன்று தினங்களில் செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (3-135)

## கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் நீதிவான் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று மேற்படி சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை நடத்தினார்.

இச்சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்து அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணிப்புரை விடுத்த அவர், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்துமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீர்வேலி இராணுவ முகாமில் கடமையாற்றும் 2ஆம் லெப்டினண்ட் சமிந்த வசந்தரட்ணபால என்பவர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:-

குறிப்பிட்ட வீதிக்குச் சமீபமாக அன்று இரவு 8.10 மணியளவில் இரண்டு இளைஞர்கள் சைக்கிளில் வந்தனர். நாங்கள் அவர்களை மறித்த போது அவர்கள் வேறு பாதைக்குத் திரும்பினார்கள்.

நாங்கள் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற பொழுது கிரனேட் ஒன்றை வெடிக்க வைத்தனர். கிரனேட் வெடித்த பின் அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது அங்கு இளைஞர் ஒருவர் உயிரிழந்து கிடந்தார். அவருக்கு அருகில் சைக்கிள் ஒன்று கிரனேட்டுடன் காணப்பட்டது. அவருடன் வந்த மற்றைய இளைஞரைக் காணவில்லை - என்று கூறினார். (உ-5-10-72-139)

## நேரடிப்பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொரு அரசும் நோர்வேயை உத்தியோகபூர்வமாக அணுகி சமாதானப் பேச்சுகளில் ஈடுபடவேண்டாம் என்று கோரவில்லை.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பைப் பொறுத்தவரை அது அவர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது. இது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. காரணம் விடுதலைப் புலிகளின் தலைவரை வன்னியில் நான் சந்தித்த போதே சமாதானத்தின மீதான அவரது ஆர்வத்தை நான் அறிந்துகொண்டுவிட்டேன்.

வன்னியில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இடம்பெற்ற சந்திப்புப் போல் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று எனக்குக் கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளை கொழும்பு விஜயங்களின் போது நான் சந்தித்துப் பேசாமைக்குக் காரணம் அவர்கள் பேச்சுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் - என்றார்.


UNIVAC நிறுவனத்தின் மாபெரும் புலமைப்பரிசில்

1000 மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்ப முடிவு திகதி 31-03-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1201, K.K.S. Road, Jaffna. (85899) Director UNIVAC

A/L 2002

பொருளியல் S. வரதராஜன்

*வரவு செலவுத் திட்டம்
*பொருளியல் II
பணமும் வங்கியும்

ஆரம்பம்: 29-03-2001 வியாழன் 3.30 (ப.நே.)

பொருளியற் கல்லூரி, இணுவில். (85872)

BARATHY

சித்தன்கேணி

O/L DAY CLASS

ஆரம்பம்-29.03.2001 காலை 8.00 மணி

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

குறிப்பு:- இம்முறை 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். (85875)

O/L DAY CLASS

சைன்

உடுவில், அளவெட்டி, மல்லாகம் கடந்தகால சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படும்.

ஆரம்பம் :- 28-03-2001 8.00 மணி

குறிப்பு: கிழமையில் 8 மணித்தியாலம் கணித வகுப்புகள். (85832)

STAR கல்வி நிலையம்

சுன்னாகம்

O/L DAY CLASS

ஆரம்பம்:- நாளை 28-03-2001 (புதன் காலை 8.30 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்) (85898)

BITSMANS

கல்வி நிறுவனம் - மானிப்பாய்

பிரிவு 1

O/L DAY CLASS ஆரம்பமாகிவிட்டது.

பிரிவு 2 மிக விரைவில் ஆரம்பம்.

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.) (85902)

BRIGHTMAN

கல்வி நிலையம்

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)

பிறவுண் வீதி, யாழ்நகர்.

பிரிவு 1

O/L DAY CLASS

யாழ்.முன்னணி ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.

ஆரம்பம் :- 28.03.2001 புதன் 9.00 a.m.

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.) (85775)

உங்கள் அறிவுக்கான எங்கள் பங்களிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட வகுப்புக்களாக

BATCH-II & III

Computer Handling

MS WINDOWS
MS WORD
MS EXCEL
INTERNET & E-MAIL

Note இதுவரை பரீட்சை எடுத்து சான்றிதழ் பெறாதவர்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

STP Computer World (Pvt) Limited

54A, Palaly Road Kantharmadam, Jaffna. T.P:2674

சைன்

உடுவில

A/L 2003

| | |
|---|---|
| கணக்கீடு | - D.SAM |
| பொருளியல | - P.மோகன் |
| வணிகக்கல்வி | - V.நந்தீஸ் |
| தமிழ் | - V.M.லிங்கம் |
| அளவையியல் | - S.சயந்தன் |
| இந்துநாகரிகம் - இந்துசமயம் - | S.சுரேஸ் |
| நாடகமும் அரங்கியலும் | - S.றமேஸ் |
| கிறிஸ்தவ நாகரிகம் | - தேவா |
| புவியியல் | - பிரபல ஆசிரியர் |

நேரஅட்டவணை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். (85831)

பதவி வெற்றிடங்கள் - உடன் விண்ணப்பிக்கவும்

கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கார் சாரதி
2. ஓட்டோ சாரதி
3. பத்திரிகை விநியோகஸ்தர்

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்களும் கொழும்பில் பணியாற்ற விரும்புவோரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை உடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.

விளம்பர இல: 1247
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/15899)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.